# அக்னி மலர்கள்

Rs. 25 Agni Malarkal Vol: 11 Issue:04 JANAUARY - 2024 Monthly Magazine Tamil



## இந்தியா கூட்டணியில் நிலவும் குழப்பங்கள்..! பிரதமர் மோடிக்கு சாதகமா?



Dr.R. கண்ணன்
மருத்துவ தொடர்



இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகள்!

## 10.5 சதவிகிதம் தனி ஒதுக்கீடு வன்னியர்களுக்கு கிடைக்குமா?



DNC
Chits Pvt. Ltd.
Trust is our Tradition. Since 1965.
நம்பிக்கையே எங்கள் பாரம்பரியம்

50 Years of Trust

சென்னை தி.நகரில்
புதிய தலைமை அலுவலகம்

DNC சிட்ஸ் வழங்கும் சீட்டு குரூப்புகள் உங்கள் எதிர்கால கட்டாய பணத்தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் உங்கள் வசதிக்கேற்ற சீட்டுத் தொகை மற்றும் கால அளவு கொண்டதாக உள்ளது. இதில் நீங்கள் உங்கள் விருப்பத்திற்கேற்றார் போல ரூ.1.00,000 முதல் ரூ.50,00,000 வரையிலான சீட்டில் சேர்ந்து உங்கள் எதிர்கால பணத்தேவையை பூர்த்தி செய்யலாம்



அனைவருக்கும் புத்தாண்டு
பொங்கல் நல்வாழ்த்துகள்

14/49, நரசிம்மன் ரோடு, வடக்கு போக் ரோடு,
தி.நகர், சென்னை-600 017
போன் : 044-4241 4444



தமிழகமெங்கும் 30 கிளைகளுடன்

“ சிட்டுன்னு DNC
சட்டுனு பணம் வரும் ”

பதிவு அலுவலகம், எண் 11, நாச்சியப்ப கவுண்டர் தெரு, தருமபுரி - 636701. போன் : 04342 262040

எமது கிளைகள் : கே.கே.நகர் 044 45022040 | கிருஷ்ணகிரி 04343-233040 | சேலம் 0427-2446040 | தஞ்சாவூர் 04362-2366040 நாமக்கல் 04286-275040 | வேலூர் 04162-221040 | ஆத்தூர் 04282-251020 | ஈரோடு 04242-262040 | எடப்பாடி 04283-222050 பேரூர் 044-48614060 | திருப்பத்தூர் 04179-223040 | கரூர் 04324-241040 | கோவை 0422-4983422 | திண்டுக்கல் 0451-2422040 தாம்பரம் 044-48574030 | கடலூர் 04142-222020 | பாலக்கோடு 04348-222040 | பொம்மிடி 04346-245060 | ஓமலூர் 04290-222040 ஓசூர் 04344-223040 | அம்பத்தூர் 044-48502040 | புரசைவாக்கம் 044-4852230 | மடிப்பாக்கம் 044-48684050 | காவேரிபட்டினம் 04343-252240 | போச்சம்பள்ளி 04341-252040 | ராசிபுரம் 04287-222050 | திருச்செங்கோடு 04288-252040 | செங்கல்பட்டு 04427-423030

2 www.dncchits.com

# வலைப்பக்கத்தில் கவர்ந்தவை...

**பா**சம் கொண்டால் பிரிவு இல்லை....
கோபம் கொண்டால் உறவு இல்லை...
பேராசை கொண்டால் நிம்மதி இல்லை...
விழிகள் இல்லையெனில் பார்வை இல்லை...
வலிகள் இல்லையெனில் வாழ்க்கை இல்லை...
முயற்சி இல்லையெனில் வெற்றி இல்லை...
முயன்ற மனிதர் தோற்றது இல்லை...

**வ**ளைந்து கொடுப்பதனாலேயே அடி பணிந்துவிட்டதாய் எண்ணிக்கொண்டால் அது உங்கள் அறியாமை. வில் வளைகிறது என்றால் அம்பின் வேகம் அதிகரிக்கிறது என்று அர்த்தம்!

**வி**ளக்கின் அடியில் படர்ந்திருக்கும் இருள் யாருக்கும் தெரிவதில்லை... அதுபோல தான் சிரிப்பின் பின்னால் சிதறிக் கிடக்கும் சோகம் யாருக்கும் புரிவதில்லை...

**வா**ழ்வில் எதிர்கொள்ளும் சிக்கல்களைச் சிரித்துக்கொண்டே கடந்துபோக முடிந்தால் உலகில் உன்னைவிட வலிமையானவர் யாருமில்லை.

**உ**னக்கு மன அமைதி வேண்டுமானால், யாருடைய குறையையும் காணாதே!
**-விவேகானந்தர்**

**ஆ**ண்டவன் சோதிப்பது எல்லோரையும் அல்ல, உன்னைப் போல சாதிக்கத் துடிக்கும் புத்திசாலிகளை மட்டுமே.
**-அப்துல்கலாம்**

**சோ**கம் மட்டுமே வாழ்க்கை கிடையாது! சுகமாகவே என் நாளும் வாழ்ந்து விடவும் முடியாது! சிமிட்டும் நம் இமைகள் ஒரு நொடி இருட்டினால்தான் நம்மால் பல நொடிகள் வெளிச்சத்தில் வாழ முடியும்...!!

**பு**கழை மறந்தாலும், நீ பட்ட அவமானங்களை மறக்காதே!! அது இன்னொரு முறை நீ அவமானப்படாமல் காப்பாற்றும்.
**- ஹிட்லர்**

**எ**ன்னை வெறுக்கும் யாரையும் நான் வெறுக்க நேரம் இல்லை...! ஏனெனில் என்னை விரும்புபவர்களை நேசிக்க மட்டுமே எனக்கு நேரம் இருக்கு...!!

**தி**றமை என்பது கடவுளால் கொடுக்கப்பட்டது அடக்கத்துடன் இருங்கள்...!!! புகழ் என்பது மனிதரால் கொடுக்கப்பட்டது நன்றியுடன் இருங்கள்...!! அகம்பாவம் என்பது நமக்கு நாமே கொடுத்துக் கொண்டது எச்சரிக்கையுடன் இருங்கள்...!!!





RK

# இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகள்!

அன்புடையீர் வணக்கம்!!

2024 புத்தாண்டு பிறக்கிறது! நாம் அதை வரவேற்கிறோம். புதியன பிறப்பதும், பழைய கழிவதும் இயற்கை தந்த கொடையாகும். அதன் அடிப்படையில் இந்த புத்தாண்டை மகிழ்ச்சியோடு வரவேற்று மகிழ்வோம்.

கடந்த கால நிகழ்வுகள், எதிர்கால கனவுகள் நம் எதிர்பார்ப்புகள் அனைத்திற்கும், இந்த புத்தாண்டு நமக்கு நல்ல வளங்களை அள்ளித்தரும் ஆண்டாக அமையும் என்ற நம்பிக்கையோடும், எதிர்பார்ப்போடும் இந்த புத்தாண்டை வரவேற்று மகிழ்வோம்! மாணவ மாணவிகள் ஆண்கள் பெண்கள் முதியவர்கள் அனைவருக்கும் இந்த ஆண்டு புதிய விடியலை தருவதோடு எதிர்கால நம்பிக்கைக்கும் ஆசைக்கும் அடித்தளம் அமைத்து தரும் ஆண்டாக 2024 அமையும் என்று நம்புவோம்.

அக்னிமலர்கள் வாசகர்கள், சந்தா தாரர்கள், தனவந்தர்கள், அன்பு உள்ளங்கள், நண்பர்கள், ஆதரவு கரம் நீட்டும் அன்பர்கள், அனைவருக்கும் இந்த ஆண்டு புதிய விடியலை தருவதோடு நம்பிக்கையை தந்து நாளும் மேலும் மேலும் வளர்ச்சி அடைவதற்கான பாதையை உருவாக்கி தரும் என்று நம்புகிறோம்.

பொதுமக்களும், வியாபாரிகளும், வணிகர் களும் விளம்பரதாரர்களும் தொடர்ந்து அக்னிமலர்கள் மாத இதழுக்கு தங்கள் அன்பான ஆதரவினை தந்திட வேண்டும் என்று விரும்புகிறோம்.

புதிய சந்தாதாரர்கள், விளம்பரதாரர்கள் வரவேற்று மகிழ்கிறோம். அக்னிமலர்கள் அனைத்து





தரப்பு ஆதரவினை பெற்று நல்ல செய்திகளையும், பயனுள்ள கட்டுரைகளையும், கருத்துக் களையும் இளைஞர்களின் வழிகாட்டியாகவும், தொடர்ந்து வாசகர்களுக்கு நல்லபல தகவல்களையும் தந்து புதிய ஆண்டில் புதிய பொலிவுடன் எல்லோருடைய மதிப்புட னும் மரியாதையுடனும் மாதந்தோறும் உங்கள் இல்லங்களில் கைகளில் வந்து சேரும் என்பதை உறுதி கூறுகிறோம். ஆதரவு தாரீர்!! இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகள்.

இப்படிக்கு

**ஆசிரியர்**

அக்னிமலர்கள்


**அக்னி மலர்கள்**

Editor / Publisher
**R.Panneerselvam B.A**

Executive Editor
**Dr.R.Kannan**
**Delhi Guruji**

Special Reporter
**Payrumthazmilan**

Sub-Editor
**Agri Dr.R.Venugopal M.Sc. (Ag.)**
**P.Shanmugam B.Sc.,(Ag.,)**
**R.Govindharaj**

Cheif Reporter
**N.Vijayarani B.Sc.,**

Reporter
**K.Kannan B.E.,**
**V.A.K.Kumarasamy B.Com., L.L.B.,**

Legal Advisors
**Judge K.Ramasamy BA.,BL.,**
**V.Gopinathan BA., BL.,**
**V.Mohan BA., BL.,**
**G.Sukumaran,**

Associates & Consultants
**Advocate, Editor-in-Chief, Bangalore**
**Ph 97400 66322, (080) 22213049**
**Advocate, Editor-in-Chief, Bangalore**
**Ph: 97400 66322 (080)22213049**

Layout
**V.Iyamperumal**

D.T.P
**K.Vidya**

Administratice Office
**Agnimalarkal**
**No.5, Muthukrishnan Street,**
**Pondy Bazar, T.Nagar**
**Chennai - 600 017**
**Ph : 044-28153055, 044-28154055**

E.Mail:
**agnimalarkalmonthly@gmail.com**
**www.agnimalarkal.com**

# இந்தியா கூட்டணியில் நிலவும் குழப்பங்கள்..! பிரதமர் மோடிக்கு சாதகமா?

**இந்தியா கூட்டணியின் வளமும், பலகீனமும் பெரும் கவலைக்குள்ளாகி யுள்ளது. பல்வேறு மாநில எதிர்கட்சிகள் ஒன்றிணைந்து உருவானது தான் இந்தியா கூட்டணி. இந்த அணி பலம் வாய்ந்ததாக உருவாகிறது என்ற செய்தியினால் பாஜக கட்சி அதிர்ச்சி அடைந்து உள்ளது என்றால் அது மிகையில்லை.**

அதே நேரம் இந்தியா என்ற பெயர் வைத்திருப்பது ஒரு வகையில் வாக்காளர்களை கவர கூடியதாக எதிர்கட்சிகளுக்கு அமைந்து உள்ளது. அதே நேரம் இந்துத்துவா கொள்கை இந்து மதம் என்ற கருத்துக்களுக்கு எதிரான ஒரு தோற்றத்தையும் இந்தியா என்ற பெயர் உள்ளடக்கி இருப்பது பாஜக கட்சிக்கு ஆபத்தை தோற்றுவிக்க கூடும் என்ற அளவில் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தவாதிகள் கூட எண்ணத் தோன்றும்.

இந்தியா கூட்டணி குறித்த பேச்சு ஆரம்பத்தில் நாடும் முழுவதும் பெரும் பரபரப்புக்கு உள்ளானது. பலராலும் பேசப்பட்டு வந்தது. இது இந்தியா கூட்டணிக்கு பலமாக இருந்தது. அதே நேரம் இந்தியா கூட்டணியை வழிநடத்தும் தலைவர் யார்? என்ற கேள்வியும் பிரதமர் வேட்பாளர் யார்? என்ற கேள்வியும் பொதுவாக எழுந்தது. இதனால் பாஜக கட்சிக்கு தேர்தலில் தங்கள் வெற்றிக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்பதை நம்புகிறது. சமீபத்தில் நடைபெற்ற இந்தியா கூட்டணி கூட்டத்தில் பங்கேற்ற தலைவர்கள் மத்தியில் ஒருவிதமான சலசலப்பு தோன்றியுள்ளது. குறிப்பாக பீஹார் முதல்வர் நிதிஷ்குமார் பேசும் பொழுது இந்தியில் பேசினார். அது திமுகவிற்கு பிடிக்கவில்லை. மேற்குவங்க முதல்வர் மம்தாபேனர்ஜி ஒரு கருத்தை வெளி யிட்டார். பிரதமர் வேட்பாளராக காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய தலைவராக இருக்கும் மல்லிகா அர்ஜுனா கார்க்கேவை முன் நிறுத்தலாம் என்றார். இது நிதிஷ்குமாருக்கு பிடிக்கவில்லை.

ஏற்கனவே டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் நாடாளுமன்ற தேர்தலில் தனித்து போட்டியிடப் போவதாக அறி வித்துள்ளார். அதே போல் கூட்டணியில் இடம் பெற்றுள்ள உத்தரப்பிரதேச முன்னாள் முதல்வர் அகிலேஷ்யாதவ் காங்கிரசுடன் கூட்டணி இல்லை என்பது போல் பேசி



வருகிறார். தமிழ்நாட்டின் முதல்வர் திமுகவின் தலைவர் மு.க.ஸ்டாலின் ராகுல்காந்தி அவர்களை பிரதமர் வேட்பாளர் என்று கூறுவதற்கும் தற்போது தயக்கம் காட்டுகிறார். இப்படிப்பட்ட சூழலில் குழப்பம் நிலவுவதால் இந்தியா கூட்டணி பலகீனம் வெளிப்படுகிறது.



காங்கிரஸ் கட்சி முன்கூட்டியே அறிவிப்பு செய்துவிட்டது. பிரதமர் போட்டியில் நாங்கள் இல்லையென்று. இந்த தகவல் மேற்குவங்க முதல்வர் மம்தாபேனர்ஜி மற்றும் பீகார் முதல்வர் நிதிஷ்குமார் இருவருக்கும் நம்பிக்கை கொடுத்து உள்ளதுடன், இந்தியா கூட்டணியை உற்சாகத்துடன் கட்டமைக்க ஏதுவாக இருந்தது. மற்ற மாநில கட்சிகளான திமுக கட்சிகள் உட்பட அனைவரும் பிரதமர் போட்டியில் நாம் இல்லை என்பதை உணர்ந்து கொண்டு இந்தியா கூட்டணி கூட்டத்தில் கலந்து கொண்டு உள்ளது.

ஆகவே இந்தியா கூட்டணியில் ஏற்பட்டுள்ள குழப்பங்களும், குளறுபடிகளும் இறுதிவடிவம் பெறும் வரை சிக்கல் நிறைந்ததாகவே இருக்கும் என்பதை உறுதியாக கூறலாம். நிலைமை இவ்வாறு இருக்கும் போது இந்தியா கூட்டணி தொகுதி பங்கீட்டிலும் எந்தெந்த கட்சிகள் எத்தனை இடங்களில் போட்டியிடுவது என்பதிலும் பொது வேட்பாளர்கள் நிறுத்துவதிலும், ஒத்த கருத்துடன் ஒருமித்த முடிவுக்கு வர முடியாத சூழ்நிலை நிலவுகிறது. மேலும் இந்தியா கூட்டணிக்கு பொருளாதார ரீதியாகவும், பல்வேறு விதமான உசலாட்டம் இருப்பதினால் கூட்டணியில் உள்ள மாநில கட்சிகள் தங்கள் மாநிலத்தில் முழு கவனம் செலுத்துவதும், தங்கள் மாநிலத்தின் வெற்றியை முன்நிறுத்துவதும் முக்கிய பங்கு வகிக்கும் என்பதால், தேர்தலுக்கு முன்பும், தேர்தலுக்கு பின்பும் காங்கிரஸ் கட்சி தனித்து விடப்படும் நிலை உருவாகலாம்.



ஆகவே இந்தியா கூட்டணி ஆட்சி அமைப்பதிலும் சிக்கல்கள் உருவாகும். இப்படிப்பட்ட நிலையில் இந்தியா கூட்டணி உள்ளது.

பாஜக கட்சியை பொறுத்தவரை தனித்தன்மையுடன் தனித்து நிற்பதுடன், ஒத்த கருத்துடன் ஒத்து வருகின்ற கூட்டணி கட்சிகளை இணைத்துக் கொண்டு பொருளாதார பிரச்சனையின்றி எப்படிப் பட்ட சூழ்நிலையிலும் வெற்றியை மட்டுமே முன்னிலைப்படுத்தி இந்தியா கூட்டணியின் எதிர்ப்புகளையும், சவால்களையும் தனித்து நின்று 2024 நாடாளுமன்ற தேர்தலில், தங்கள் பலத்தை நிரூபித்தி காட்டி பிரதமர் மோடி தலைமையில் மீண்டும் ஆட்சியமைப்பதற்கான முயற்சியை தங்கு தடையின்றி மேற்கொள்ளும். மக்கள் யார் பக்கம் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். இந்தியா கூட்டணியா? பிரதமர் மோடியா? என்பது மக்களின் மனதில்.

– டெல்லிகுருஜி



டாக்டர் அன்புமணியின் கோரிக்கை ஏற்கப்படுமா?

# 10.5 சதவிகிதம் தனி ஒதுக்கீடு வன்னியர்களுக்கு கிடைக்குமா?

## முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் டாக்டர் ராமதாஸ் சந்திப்பு..!

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தலைமை செயலகத்தில் நேரில் சந்தித்து டாக்டர் ராமதாஸ் உரை யாடினார். அப்பொழுது நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப் பட்டோர் மற்றும் உயர்கல்வித்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற குழு தலைவர் ஜி.கே.மணி, தலைமை செய லாளர் சிவதாஸ் மீனா,ஆகியோர் உடன் இருந் தார்கள்.**

முதல்வரிடம் இரண்டு புத்தகங்களை வழங்கிய டாக்டர் ராமதாஸ் வன்னியர்களின் நீண்ட நாள் கோரிக்கையான தனி இடஒதுக்கீடு குறித்து ஆலோசித்தாரா என்ற தகவலை அதிகார பூர்வமாக தமிழக அரசு செய்தியாக வெளியிடவில்லை. ஆனால் பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வேண்டுகோளை ஏற்று முதல்வரை சந்தித்தார் மருத்துவர் ராமதாஸ் என்பது தெளிவாக தெரிகிறது.

சமீபத்தில் பாமக நடத்திய சமூக நீதி மாநாட்டில் பங்கேற்று பேசிய அன்புமணி ராமதாஸ் முன்வைத்த இந்த கோரிக்கையை மருத்துவர் ராமதாஸ் கவனமாக கேட்டறிந்தார். கூடவே நீங்கள் முதல்வரை நேரில் சந்தித்து பேசுங்கள் என்றும் கூறுங்கள் என்றார். அந்த வகையில் வன்னியர்களுக்கு 10.5 சதவிகிதம் உள்ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை பாமக கையில் எடுத்துக் கொண்டு பல்வேறு சமுதாயத்தினரை அழைத்துக் கொண்டு மாவட்டந்தோறும் வன்னிய சமுதாய மக்களின் நிலையை எடுத்துக் கூறி ஆதரவு திரட்டி வருகிறார் டாக்டர் அன்புமணி ராமதாஸ்.

இந்த தகவலை தமிழக அரசிடம்



நேரடியாக கொண்டு சென்று, முதல்வர் அவர்களை நேரில் சந்தித்து வன்னியரின் நியாயமான கோரிக்கைளை தமிழக அரசிடம் எடுத்துக் கூறி வன்னியர்களுக்கான தனி உள்ஒதுக்கீட்டை பெற வேண்டும் என்ற கோரிக்கையை முதல்வரிடம் டாக்டர் ராமதாஸ் அவர்கள் வலியுறுத்த வேண்டும் என்பதை பாமக தலைவர் என்ற முறையில் டாக்டர் அன்புமணி ராமதாஸ், மருத்துவர் ராமதாஸ் அவர்களையும் வலியுறுத்தி வந்தார். அதன் அடிப்படையில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து அன்புமணியின் கோரிக்கையை வலியுறுத்திள்ளார் டாக்டர் ராமதாஸ் என்று வன்னியர்கள் கருதுகிறார்கள். அதே நேரம் சாதிவாரி கணக்கெடுப்பை விரைந்து நடத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் முதல்வரிடம் எடுத்துக் கூறுங்கள் என்று டாக்டர் ராமதாஸ் அவர்களிடம் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியிருந்தார். அந்த கோரிக்கையையும் முதல்வரிடம் மருத்துவர் ராமதாஸ் வலியுறுத்தி இருப்பார் என்று வன்னியர்கள் கருதுகிறார்கள்.

வன்னியர்களுக்கு 10.5 சதவிகிதம் தனி உள்ஒதுக்கீடு வழங்குவதினால் எந்த ஒரு சமுதாயத்திற்கும் கல்வி மற்றும் அரசு வேலைவாய்ப்பில் இழப்புகள் ஏற்பட போவதில்லை அதே நேரம் தனி உள்ஒதுக்கீடு கேட்பதினால் எந்த ஒரு சாதிக்கும் வன்னியவர்கள் எதிரானவர்கள் அல்ல என்பதையும் முதல்வரிடம் தெளிவாக எடுத்துக் கூறுங்கள். இதை போல் சாதிவாரி கணக்கெடுப்பை நடத்தி தமிழ்நாட்டில் வசிக்கும் அனைத்து சாதிகளுக்கும் உரிய பிரதி நிதித்துவம் வழங்கும் வகையில் மக்கள் தொகை அடிப்படையில் இடஒதுக்கீட்டை வழங்கி சமூக நீதியை நிலை நாட்டுங்கள். இதனால் தமிழ்நாட்டிற்கு எந்தவித பாதிப்பும், இழப்பும் ஏற்பட போவதில்லை காலம் தாழ்த்தாமல் வன்னியர்களின் தனி உள்ஒதுக்கீடு கோரிக்கையையும் நிறைவேற்றுவதுடன், சாதிவாரி கணக்கெடுப்பையும் நடத்தி முடிக்க வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்துகிறார். தமிழக அரசும், முதல்வர் மு.க.ஸ்டாலினும் எத்தகைய



முடிவினை எடுக்கப்போகிறார்கள் என்பதனை பொறுத்திருந்து பார்க்க வேண்டும். எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக நல்ல முடிவை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பாரா? 10.5 உள்ஒதுக்கீடு சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமா? இதற்காக சட்டசபை கூட்டத் தொடரில் சட்டம் நிறைவேற்றப்படுமா? என்பது வன்னியர்களின் முன் உள்ள எதிர்பார்ப்பு.

## உண்மை பேசுகிறது!

**டாக்டர் இராமதாஸ் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து பேசியதினால் திமுகவுடன் பா.ம.க. தேர்தல் கூட்டணிக்கு தயாராகிறது என்று சிலர் நினைக்கலாம். அதே போல் வன்னியர்கள் வாக்கு களை கவர்வதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டமிடுகிறார் என்றும் பலர் நினைக்கக் கூடும். இதில் எது நடந்தாலும் இழப்பு என்பது வன்னியர்களுக்கு வராமல் பார்த்துக் கொள்வது தமிழ்நாட்டுக்கு நன்மை தரும்.**

**ஏமாற்றம் ஏற்றம் தராது! உண்மை நிலைத்து நிற்கும்!**

# தவம் செய்தவனுக்கு சிறை தண்டனையா?
# காலத்தின் கோலம் கடிதம் பேசுகிறது!

**சங்கரராமன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு, வேலூர் மத்தியச் சிறைக்குக் கைதியாகக் கொண்டு வரப்பட்டு என் முன் நிற்க வைக்கப்பட்டார் ஜெயேந்திரர்.கண்கள் இரண்டும் உக்கிரத்தில் சிவந்திருந்தன.**

கோபம், வருத்தம், இயலாமை, அவமானம் என உணர்ச்சிகளின் பிழம்பாக தண்டத்தைக் கையிலேந்தி நின்றார்.

கண்களில் கண்ணீர் முட்டியது. அழுதால் அசிங்கமாகி விடும் என்று அதைக் கட்டுப் படுத்திக்கொண்டிருந்தார்.

இந்து மதத்தின் ஒப்பற்ற தலைவர் ஜெகத்குரு, இப்போது ஒரு சிறைக்கைதி. நான் நின்றுகொண்டு அவரை அமரச் சொன்னேன். அவர் அமரவேயில்லை. ஜனாதிபதியின் இருக்கையில் அமர்ந்தவர், என் முன்னே நின்றுகொண்டே பேசினார்.

இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் அவரைக் கொட்டடியில் அடைக்க வேண்டும். திடீரென அவர் சிறைக்குக் கொண்டுவரப்பட்டதால், அவருக்கு எந்தச் சிறப்பு முன்னேற்பாடும் செய்யவில்லை. அரசியல் கைதிகள் அதிக எண்ணிக்கையில் வரும்போது, அவர்களை அடைப்பதற்காக 20 ஏக்கர் பரப்பளவுள்ள 'குளோஸ்டு ப்ரிஸன்' (Closed Prison) தொகுதி இருந்தது. அது, நீண்ட நாள்களாக யாரும் அடைக்கப்படாமல் புதர் மண்டிக்கிடந்தது.

அந்தத் தொகுதியையே அவருக்கு ஒதுக்க முடிவு செய்தேன். ஆயிரம் கைதிகளை உடனே அந்த வளாகத்துக்கு அனுப்பி, இரண்டே மணி நேரத்தில் சுத்தமாக்கினேன். தண்ணீர் மற்றும் மின்சார வசதிகள் செய்யப்பட்டன. போலீஸ் இன்ஸ்பெக்டர் அந்தஸ்திலுள்ள இரண்டு அதிகாரிகள் தலைமையில் 40 காவலர்கள்கொண்ட ஒரு குழு ஏற்பாடு செய்யப்பட்டு, இரவு பகலாகப் பாதுகாக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இத்தனை ஏற்பாடுகளையும் செய்துவிட்டு அந்தத் தொகுதிக்குப் போகச் சொன்னபோது, அவர் என்னிடம் சொன்ன வார்த்தை, என்னை அதிரவைத்தது... "நான் இனி உயிரோடு இருக்கப் போவதில்லை. இவ்வளவு பெரிய அவமானத்தைச் சகித்துக்கொண்டு உயிர் வாழ எனக்கு விருப்பமில்லை. உண்ணா நோன்பு இருந்து உயிரை மாய்த்துக்கொள்ளப் போகிறேன்!" என்றார்.

**என் மனதில் தோன்றியதை நான் பேசினேன்...**

"நீங்கள் முற்றும் துறந்த துறவிதானே... உங்கள் பார்வையில், உள்ளே இருந்தால் என்ன, வெளியுலகில் இருந்தாலென்ன? இரண்டும் ஒன்றுதானே. கடவுள் ஒரு சில நாள்கள் உங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கச் சொல்கிறார். சிறையைவிடப் பாதுகாப்பான இடம் வேறு ஏதும் இல்லையே!" என்றேன்.

**அவர் சற்றே நிதானித்துவிட்டுப் பேசினார்...**

"என்னதான் எல்லாவற்றையும் துறந்தாலும் எனக்கென்று சில கடமைகள் இருக்கின்றன. லோக க்ஷேமத்துக்காக பூஜை செய்யாமல் சாப்பிடக் கூடாது. நான் நினைத்தவாறு சிறைக்குள் பூஜை செய்ய முடியுமா?" என்று கேட்டார். "உங்கள் பூஜைக்கான ஏற்பாடுகளை நான் செய்கிறேன்" என்றேன். "பூஜை செய்ய தனி இடம் வேண்டும்" என்றார். "கொடுக்கிறேன்" என்றேன்.

"சிறையில் கொடுக்கப்படும் உணவை என்னால் சாப்பிட முடியாது; என் ஆசாரப்படி என்னுடைய உணவு ஒரு பிராமணரால்தான் சமைக்கப்பட வேண்டும், கிணற்று நீர்தான் அருந்துவேன்" என்றார்.



''அனைத்துக்கும் ஏற்பாடு செய்கிறேன்'' என்றேன். அவர் எதைக் கேட்டாலும், செய்து கொடுக்கும் மனநிலையில்தான் நானிருந்தேன்.

தண்டனைக் கைதியாக இருந்த ஒரு பிராமணக் கைதியால் அவருக்கு உணவு சமைக்கப்பட்டு, எனது பரிசோதனைக்குப் பிறகு அவருக்கு வழங்கப்பட்டது. காலையில் அரை லிட்டர் ராகிக்கஞ்சி, மதியம் 500 கிராம் தயிர்சாதம் அல்லது எலுமிச்சை சாதம். இரவு மூன்று பூரி, 200 மி.லி பால்... அவருடைய ஒரு நாள் மொத்த உணவும் இவ்வளவுதான்! இதைச் செய்து கொடுக்க முடியாதா ஒரு சிறைக் கண்காணிப்பாளரால்?

எல்லாவற்றையும்விட அவருடைய பாதுகாப்புக்கு நான் பெரிதும் கவனம் செலுத்தினேன். அதற்குக் காரணம் உண்டு. அவரைச் சிறைக்கு அனுப்பிய பிறகு, அவரைப் பாதுகாப்பது குறித்து எந்த ஓர் அறிவுறுத்தலும் அரசுத் தரப்பிலிருந்து எனக்கு வரவில்லை. ஆனால், வெளியிலிருந்து பலரும் அவரைப் பத்திரமாகப் பாதுகாக்கச் செ்லலி என்னிடம் தொலைபேசியில் பேசினார்கள்.

அதில் நான் எதிர்பாராத ஒருவரிடமிருந்து அழைப்பு வந்தது. ஜெயேந்திரரின் பாது காப்புக்கு நான் அவ்வளவு மெனக்கெட்டதற்கு அவர் பேசியதும் மிக முக்கியக் காரணம்.

ஜெயேந்திரரை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளச்சொல்லி எனக்குத்தொலைபேசியில் அன்புக்கட்டளைபோட்டவர் , கலைஞர் .

அவர்தான் என்னிடம் பேசி, “அவரை பத்திரமாகப் பார்த்துக்கொள். எங்களுக்குள் கொள்கை முரண்கள் இருந்தாலும், அவர் ஏராளமான மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருப்பவர். அதனால் அவரைக் காக்க வேண்டியது அவசியம். அது மட்டுமன்றி அவருக்கு ஏதாவது ஒரு பாதிப்பு ஏற்பட்டாலும், அது கொள்கைக்கு முரணானவர்கள் செய்த காரியமாகக் கருதப்படவும் வாய்ப்புண்டு. அதில் உன் பெயரும் பழுதாகிவிடும்!” என்று எச்சரித்தார்.

ஓர் இந்துமதத் துறவியை, ஜனாதிபதி இருக்கையில் அமரவைத்து அழகு பாத்த ஜனாதிபதி ஒரு இஸ்லாமியர்.

அவரை பத்திரமாகப் பார்த்துக்கொள்ளச் சொல்லி வேண்டுகோள்விடுக்கிறார் பகுத்தறிவு பேசும் அரசியல் தலைவர்.

ஆனால், இந்து மதத்தில் தீவிரமான பற்றும் பக்தியும் கொண்ட ஒருவரின் ஆட்சியில் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். வேற்றுமையில் ஒற்றுமைதான் நம் தேசமோ...' என்று தோன்றியது எனக்கு.

**_ ஜி.ராமச்சந்திரன்**
ஓய்வுபெற்ற.டி.ஐ.ஜி.
சிறைத்துறை.



# அரசியல் ஆக்கரமிப்பை அகற்றுவோம்! அப்பாவிகளை அரியனை ஏற்றுவோம்!

**வன்னியர் என்றால் சாதி வெறியர்களா??? தமிழ்நாடு மற்றும் இந்திய நாட்டிற்கு போராடிய வன்னியர்கள் வரலாற்றில் மறைத்தது ஏன்??? சிறிது நேரம் எடுத்துக்கொண்டு படியுங்கள். கட்சி வேறுபாடின்றி அனைத்து வன்னியர்களுக்கும் இந்த உண்மை தெரியட்டும் அனுப்புங்கள்....**

தமிழ் இனமே வன்னியர் சமூகத்திற்கு எல்லோரும் செய்த துரோகத்திற்கு எப்பொழுது பிராயச்சித்தம் தேடப்போகிறீர்கள் ??

தமிழ் நாட்டில் எல்லா சாதியின் வரலாற்றையும் அங்கீகரித்து, சிலையாகவும், தபால் தலையாகவும், பாடமாகவும் ஆவணப்படுத்தி, அழகு படுத்தி, பெருமை படுத்தி அந்த சமூகங்களின் வரலாற்று பங்களிப்பை அங்கீகரித்த நீங்கள் அனைவரும், என்றாவது தமிழகத்தின் பெரிய சாதியான வன்னியர் சமூகத்திற்கென்று ஒரு வரலாறு உண்டு, அவர்களும் இந்த நாட்டிற்காக போராடி பல தியாகங்களை செய்தவர்கள் என்ற எண்ணம் உங்களுக்கு வந்திருக்கிறதா?

காமராஜர் படத்தை பெருமையாக போட்டுக்கொள்ளும் எந்த ஒரு நாடாரும் அவரை முதல்வராக்கிய எஸ்.எஸ்.ராமசாமி படையாட்சியாரை மறந்தும் பேசியதில்லை, தமிழ் தேசியம் பேசும் கனவான்கள் மறந்தும் மறை மலை அடிகளின் குரு சைவதிரு சண்டமாருதம் சோம சுந்தர நாயகர் பற்றி பேசியதில்லை, விவேகானந்தரையே வாதத்தில் வென்று சைவம் உயர்ந்தது என்று இம்மண்ணில் சமயத்தை காத்த அந்த தமிழ் பெருமகனைப் பற்றி யாருக்கும் ஏன் தெரியவில்லை?

தமிழகத்தில் பாரதி என்ற பட்டம் பெற்றவர்கள் இருவர்; ஒருவர் பார்ப்பனர் சுப்ரமணியம், மற்றொருவர் வன்னியர் சோம சுந்தர நாயகர், ஒரு போட்டியில் இருவரும் ஒருசேரப் பெற்ற பட்டம் தான் இந்த பாரதி, ஆனால் பாரதி என்றால் உங்களுக்கு சுப்பிரமணியம் தான் நியாபாகத்திற்கு வரும்,

கவிதை என்றால் சுப்ரமணிய பாரதி தான் ஞாபகத்திற்கு வரும், தனித்தமிழ் இயக்கம் நடத்தி தமிழ்த் தொண்டாற்றிய சோமசுந்தர பாரதி ஞாபகத்திற்கு வரமாட்டார், அதே சுப்ரமணிய பாரதிக்கு நிகராக திருவிக அவர்களால் போற்றப்பட்ட கவிதைகளை எழுதிய கவிச்சிங்கம், வெள்ளையன் தடையை மீறி பாரதியின் மறைவிற்கு இரங்கேற்பா பாடிய வீரர், அந்த பாரதி பெயரில் வீரபாரதி என்று பத்திரிகை நடத்தி இந்நாட்டு மக்களுக்கு தன் உணர்ச்சி மிகுந்த கவிதையின் மூலம் சுதந்திர தாகத்தை ஊட்டி பின்னால் வெள்ளையன் அந்த பத்திரிகையையும் தடை செய்து வர்மாவின் வளத்தை குலைத்தனர், அனால் உங்களுக்கு சுதேசி மித்திரன் தான் தெரியும், ஆனால் ராஜாஜியால் ராஜ ரிஷி என்று அழைக்கப்பட்ட அர்த்தநாரீச வர்மாவின் வீரபாரதி பற்றி ஒன்றும் தெரியாது!

தமிழகத்தின் முதல் பகுத்தறிவுவாதி அத்திப்பாக்கம் வெங்கடாசல நாயகர் (வன்னியர்) பற்றி அறிந்தவர் எத்தனைபேர்? பறையர் ரெட்டை மலை சீனிவாசன், அயோத்திதாச பண்டிதர் பற்றி தெரிந்த உங்களுக்கு அவர்களுக்கும் முன்பே the thinker என்று அங்கிலாத்திலும், தத்துவ விவேசினி என்று தமிழிலும் பகுத்தறிவு இதழ் நடத்தி, பிற்படுத்தப்பட்ட மக்களின் நில உரிமைக்கு போராடிய இந்த தமிழ் பெரியாரை தெரியாயது, ஆனால் கன்னட ஈ.வெ.ராமசாமி பெரியாரை நல்லா தெரியும்.

விவேகானந்தரையே வாதத்தில் தோற்கடித்த சண்டமாருதம் சூலை சோமசுந்தர நாயகரை தெரியாது, ஆனால் இவரிடம் தமிழ்க் கற்ற சிஷ்யன் மறைமலை அடிகளைத் தெரியும், சண்டமாருதம் சூலை சோமசுந்தர நாயகர் பெயரில் ஒரு துண்டுச்சீட்டு கூட இல்லை ஆனால் மறைமலை அடிகள் பெயரில் எத்தனை எத்தனை தெருக்கள், எத்தனை எத்தனை கட்டிடங்கள், எத்தனை எத்தனை சிலைகள்?

வடநாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பிற்படுத்த மக்கள் வாழ்வில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களுக்கும் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றி அரசாளும் தகுதி உண்டு என்று உணர்வை ஊட்டி, மண்டல் கமிஷன் கொண்டு வந்து புரட்சி செய்த தமிழ்நாட்டு தாடிவைத்த பெரியார் அய்யா வெ.ஆணைமுத்து அவர்கள் வரலாறு எங்கே போனது? அவருக்கு தமிழ்நாட்டு அரசு சிலை வைத்து உரிய மரியாதை செலுத்த வேண்டாமா?

காந்தியால் சர்தார் என பட்டம் கொடுக்கப்பட்ட ஆதிகேசவ நாயகர் சென்னை சென்ட்ரல் பகுதியில் இருந்த தன்னுடைய நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தின் கொள்கைக்காக வரி கொடாமல் 7 ஆண்டுகள் சிறைப்பட்டு தன்னுடைய அத்தனை நிலத்தையும் இழந்து இந்நாட்டிற்காக தியாகம் செய்தார், (இன்றைக்கு உள்ள சென்ரல் இரயில் நிலையம் இடம்) அவருக்கு சென்னையில் ஒரே ஒரு சிலை உண்டா? அவர் இடத்திற்கு புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் இரயில் நிலையம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஆனால் ஆதிகேசவலு நாயக்கர் பெயர் சூட்டப்படவில்லை? –

வேலூர் சிப்பாய் புரட்சியை ஒடுக்கிய நீல் துரையின் சிலையை நிறுவ வெள்ளைக்கார அரசாங்கம் முயற்சித்த பொழுது பெண்களை ஒன்று திரட்டி எழும்பூரில் உள்ள அச்சிலை எதிர்ப்பு போராட்டம் செய்து நிறை மாத கர்ப்பிணியாய் சிறையில் வதை பட்டு, பல முறை அதிகாரிகள் கெஞ்சியும் பரோல் வேண்டாம் என்று சிறையிலேயே பிள்ளையை பெற்றெடுத்த அந்த வன்னிய பெருந்தாய் அவளின் மகனுக்கும் ஜெயில் வீரன் என்று பெயர் வைத்து அந்த சிசுவாயும் சுதந்திரப் போராட்டத்தில் ஐக்கியமாக்கினால், இதனால் காந்தியால் தென்னகத்து ஜான்சி ராணி என்று அழைக்கப்பார் இந்த இந்த வீர மங்கை, இவர் தான் தமிழ் நாட்டின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர், ஆனால் உங்கள் வாய் மேலவையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முத்து லட்சுமி ரெட்டியை தான் கொண்டாடும். பாடமாக படிக்கும். கடலூர் அஞ்சலை அம்மாலை தெரியாது! அவர் சிலை கடலூரில் திறக்கப்பட்டுள்ளது இப்பொழுது.

இதே போன்றதொரு வீரமங்கை தான் தென்னகத்து பாண்டிய குல மங்கை வீரம்மாள் அரசியார், இந்தியாவில் முதன் முதலில் ஜான்சி ராணி, வேலு நாச்சியாருக்கும் முன்பு வெள்ளையனை எதிர்த்து போர் செய்து வெற்றி பெற்ற வீர மங்கை, ஆனால் சிலர் சாதி வெறி வேலு நாசிச்சியார் தவிர

வேறு யாரையும் ஆராதிக்காது.

இந்திய சுதந்திர போராட்டத்தின் முதல் சத்தியாகிரக தியாகி சாமி நாகப்ப படையாட்சி தன் 19 வயதில் காந்தியம் பூண்டு உண்ணாவிரத போராட்டத்தில் எச்சில் கூட விழுங்காமல் இறந்துபோனார், ஆனால் இவருக்கு பின்னால் வந்த தில்லையடி வள்ளியம்மை என்ற முதலியார் சாதி பெண்மணி மட்டுமே தென்னாப்பிரிக்காவில் போராடினார் என்று பாடமாக படிப்பீர்கள், சிலை வைத்து கொண்டாடுவார்கள்.




இப்படி மறைக்கப்பட்டு, இருட்டடிக்கப் பட்ட எங்கள் தலைவர்களின் பட்டியல் இந்த ஒரு பதிவில் அடக்க முடியாது, இவர்கள் அனைவர்களையும் ஒன்று சேர்த்த உருவமாய் இன்று இந்த தமிழ்நாட்டின் அத்தனை பிரச்சனைகளுக்கும் குரல் கொடுத்து, அனைத்து மக்களுக்கும் போராடி, சிறைகள் பல சென்ற மருத்துவர் ஐயாவை சாதி வெறியர், அவர் துவக்கிய இயக்கம் சாதிக் கட்சியா?

எங்கள் மண்ணில் எங்கள் முன்னோர் களுக்கு சிலை இல்லை ஆனால் சிலருக்கு (அம்பேத்கர்) மூளைக்கு மூளை சிலைகள் ஏன் என்று கேட்கலாம். மாலை போட்டு அழகு பார்க்கிறோம். அதனால் தான் நீங்கள் எல்லாம் எங்களை சாதி வெறியர் என்கிறீர்கள்.

மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, கோவை, என உள்ள பகுதியில் எந்த வன்னிய முதலாளியைக் கொண்டு அல்லது எந்த வன்னிய அரசியல் வாதியைக் கொண்டு உங்கள் பகுதி , உங்கள் சாதி உரிமைகளை நங்கள் சாதி அரசியல் செய்து பரித்தோம்? எங்கள் பகுதியில் எங்கள் மக்களை நுகர்வுப் பண்டமாக பயன்படுத்தி, சுரண்டி கொழுக்கும் உங்களையும் உங்கள் அரசியல் அடித்து விரட்டி அல்லது ஐந்து லட்சம், பத்து லட்சம் கேட்டு மிரட்டி அரசியல் செய்தோமா? ஆக்கிரமிப்பையும்,

எங்களால் எந்த சாதியின் சமூக நீதிக்கு பங்கம் வந்தது? உங்கள் ஊரில் உங்கள் சாதிக்காரனை தவிர வேறொருவனுக்கு வீடு கூட வாடைக்கு தராத நீங்கள், உங்கள் தொழிலில் வாச்மேன் வேலையை கூட உங்கள் சாதிக்காரனை தவிர வேறொரு சாதிக்கு வீட்டுக் கொடுக்காத நீங்கள், இவை அனைத்தையும் வீட்டுக் கொடுத்து தியாகம் செய்யத எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு வாழ்கிற எங்களைப் பார்த்து சாதி வெறியர் என்றும் நாங்கள் ஆதரிக்கும் கட்சியை பார்த்து சாதிக் கட்சி என்றும் சொல்லலாமா? இது நியாயமா?

இப்படிக்கு

**(சினம் கொண்டு வன்னியர் எழுதிய கடிதம், மக்கள் பார்வைக்கு மட்டும்)**


Prime
Indian Hospitals
Changing Lives
Arumbakkam, Chennai
வயிறு
மற்றும்
குடல்
என்றாலே
Prime Indian Hospitals
அனைவருக்கும் புத்தாண்டு
பொங்கல் நல்வாழ்த்துகள்
Dr.R.கண்ணன்
வயிறு மற்றும் குடல்
அறுவை சிகிச்சை நிபுணர்
#1051, Poonamalle High Road, Arumbakkam, Chennai - 600106.
www.chennaigastroenterologist.in / www.primeindianhospitals.com / mail : gisurgeonrk@gmail.com
contact@primeindianhospitals.com / primeindianhospitals@gmail.com
044 - 23639999, 9884493140

# தமிழ்மொழி பற்றால் உயிரை விட்டான்! சந்தனகாடு வீரப்பன்!



வீரத்தை தோள் மீது சுமந்தான்!
தமிழ் மாதர் மானத்தை உயிர் என்று கருதி
மக்கள் தாகத்தை தீர்த்தான்!
எவருக்கும் சோரம் போகாமல்
துணிந்து நின்று போராடினான்!
எவர் வந்தாலும் வீரம் எனதென்று
உரக்கக் குரல் கொடுத்தான்!
ஆடு புலி ஆட்டம்
அவன் பொழுது போக்கு!
அதிகார அதிரடி படைக்கு
சிம்ம சொப்பனமாய்
எதிர்த்து நின்று போர் தொடுத்தான்!
யானை தந்தம்
சந்தன மரம் வெட்டியவன்!
என்று பெயர் எடுத்தான்!
கொலை களவு
ஆள் கடத்தல் என்று புகழ் பெற்றான்!
காட்டு வாழ்க்கை
காலம் முழுவதும் என்று
கனவில் வாழ்ந்தான்!
நாட்டு பற்றுடன் மனிதனாய்
வாழ்ந்திட வேண்டும் என்று ஆசைப்பட்டான்
சில காலம் சிறைவாசம்
பலகாலமாய் வனவாசம்
வாழ்க்கை முடிந்து விடும்
என்பதை உணர்ந்தவன்!
ஆனால் நீண்ட நாள் வாழ விரும்பினான்!

இருட்டில் இருந்தவன்
வெளிச்சம் பார்க்க
முயற்சி செய்தான்!
சூழ்ச்சி, சதி
உடன் இருந்து
விதி விளையாடியது
கள்ளத்தனம் காவலாய்
நின்று களப்பணியில்
ஈடுபட்டு கச்சிதமாய் சாய்க்கப்பட்டான்!




சமரசம் பேசிட ஆள் இன்றி
மரண
சரித்திரத்தில் இடம் பெற்றான்!
கணக்கு காட்டப்பட்டு
பரிசுடன் முடிவடைந்தது
வீரப்பன் வாழ்க்கை!

மங்கையின்
மானம் காத்தான்
ஏழைகள்
கண்ணீரை துடைத்தான்!
காடு, மலை சுற்றித் திரிந்தான்
காடுகளை காவல் காத்தான்
நாடு தேசம் என்று
உள்ளம் உறுதியுடன்
பேசி வந்தவன்
தமிழ்மொழி பற்றால்
உயிரை விட்டான்!

- ஆர்.பி

# காகித தோட்டத்தில் கவிதை 'பூ'

திருவாரூர் கீழை நிலாபாரதி

ஒரு குளிர்ந்த
இசையொன்றை
நீ மீட்டிய போது
தீ பற்றிக்கொண்டது
என் பசலைக்காடுகள்...

முதலில்
அகப்படு போதும்...
பிறகு கொண்டாடலாம்
நம்
மழை ரசித்தலை...

அப்படி பார்க்காதே.
என்கிறேன்..
வேறெப்படி
என்பதையும்
அதே பார்வையில்தான்
திரும்பவும் கேட்கிறாய்..

ஒரு மழைக்குப் பின்
கசிந்த சாரலின்
வாசனைக்குள்
எப்படியோ...
கண்டுப்பிடித்து விட்டாய்
எனை...!

நெற்றிப்பொட்டில்
இசைத்தாய்..
எனது நடுநடுங்கும்
உடலெங்கும்
உன்
உயிர்ப்பின் தேடல்..

அடர்ந்த
மல்லிகை காட்டில்
எனை தேடு
அதற்குள்



என் வாசம் கண்டுபிடி
அதனுள்
இன்னும் வசமாக்குவேன்
உன்னை...

அத்தனையும்
பச்சை கிளிகளாய்..
அவள் அமர்ந்து
எழுந்து போன
மரத்தின் மேல்
பறந்து செல்கிறது.

சாய்ந்து கிடக்கும்
உனது
சர்க்கரை நாற்காலி
எனக்குள் தித்திக்கும்
சூசகம் என்ன..?

எத்தனை முறை
தோற்றாலும்
அத்துனை முறையும்

உனை தேடுவேன்...

நீ சலிக்காத தேவதை
சாயாத பூமரம்
காயாத பெருநதி
கசக்காத தேடல்..

வாசல் நுழைந்து
நெருங்கி வருத்தும்
மார்கழி குளிரில்
இனியும்
தப்பித்து செல்ல
வழியில்லை உனக்கு...

இடைவிடாத மழையில்
சப்தமிடும் குளிரில்
தவளையின் வளை
பொந்துகளில்
அடைகாக்கும்
ரகசியங்களென
பயமறிந்தே நம்மை
வாசித்துக் கொண்டோம்...

அத்தனை நட்சத்திரங்களையும்
பறித்து விடாதீர்கள்
அவளின்
முதல் பார்வையென
ஞாபகம் கொள்ள
ஒன்றையேனும்
மிச்சம் வையுங்கள்.

உன் செல்லப்பேச்சுகள்
மெல்லமாய்
ஒலித்துக் கொண்டே
இருக்கிறது
என் காதில்...

# புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்க மறுப்பு: தமிழக நலனை திமுக அரசு தவறவிட்டது!

## பாமக தலைவர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் கண்டனம்

**இந்தியா முழுவதும் புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு விண்ணப்பிப்பதற்காக தேசிய மருத்துவ ஆணையம் வழங்கியிருந்த காலக்கெடு நவம்பர் 26-ஆம் நாளுடன் நிறைவடைந்து விட்ட நிலையில், தமிழ்நாட்டில் புதிய மருத்துவக் கல்லூரிகளுக்காக விண்ணப்பிக்க தமிழக அரசு தவறி விட்டது. 2025-ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ்நாட்டில் புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க எந்த உத்தரவாதமும் இல்லாத நிலையில், கிடைத்த அரிய வாய்ப்பை தமிழக அரசு தவற விட்டிருப்பது கண்டிக்கத்தக்கது.**

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 38 மாவட்டங்களில் 32 மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப் பட்டுள்ளன. மாவட்டத்திற்கு ஓர் அரசு மருத்துவக் கல்லூரி என்ற கொள்கையின் அடிப்படையில் காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், பெரம்பலூர், மயிலாடுதுறை, தென்காசி ஆகிய 6 மாவட்டங்களில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. 2021 தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையில் அனைத்து மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும் என்று திமுக வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால், ஆட்சிக்கு வந்து மூன்றாண்டுகள் நிறைவடையவிருக்கும் நிலையில், இதுவரை ஒரு மருத்துவக் கல்லூரியைக் கூட தமிழக அரசு தொடங்கவில்லை. அதற்கான நடவடிக்கைகளையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

மற்றொருபக்கம், 10 லட்சம் மக்கள் தொகைக்கு 100 மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும் என்ற புதிய விதிமுறையை கடந்த ஆகஸ்ட் 16ஆம் நாள் தேசிய மருத்துவ ஆணையம் நடைமுறைப்படுத்தியது. அந்த விதிகளின்படி, தமிழக மக்கள்தொகைக்கு தேவையானதை விட கூடுதலான மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்கள் இருப்பதால், தமிழ்நாட்டில் இனி புதிய மருத்துவக் கல்லூரிகள் அனுமதிக்கப்படாது என்றும் மருத்துவ ஆணையம் ஆணையிட்டது. அதற்கு எதிராக தமிழ்நாட்டில் இருந்து நான் தான் முதன்முதலில் குரல் கொடுத்தேன். மத்திய சுகாதாரத்துறையின் முன்னாள் அமைச்சர் என்ற முறையில் பிரதமருக்கு கடிதமும் எழுதினேன். அதன் பயனாக தமிழகத்தில் புதிய மருத்துவக் கல்லூரிகளை திறப்பதற்கான கட்டுப்பாடுகள் ஓராண்டுக்கு தளர்த்தப்பட்டன. அதன்படி 202425ஆம் ஆண்டில் புதிய கல்லூரிகளை திறக்க தேசிய மருத்துவ ஆணையம் அனுமதி வழங்கியது.

அதன்படி, 202425ஆம் ஆண்டில் புதிய கல்லூரிகளைத் தொடங்க நவம்பர் 16ஆம் நாள் முதல் 26ஆம் நாள் வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டன. தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் அரசு மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க வேண்டும் என்பதில் தமிழக அரசுக்கு அக்கறை இருந்திருந்தால் புதிய மருத்துவக் கல்லூரிக்கு விண்ணப்பித்திருக்க வேண்டும். அதிலும்

குறிப்பாக 202526ஆம் ஆண்டுக்குப் பிறகு புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க முடியாது என அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், இது தான் கடைசி வாய்ப்பு என்பதால் அதை தமிழக அரசு உறுதியாக பயன்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கத் தவறியதன் மூலம் தமிழ் நாட்டு மாணவர்களின் நலனை தாரை



வார்த்து விட்டது. இது அரசின் பெரும் தோல்வி.

புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கத் தவறியிருப்பதன் மூலம், தேசிய மருத்துவ ஆணையம் அதன் விதிகளை திருத்தாத வரை, தமிழ்நாட்டில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கவே முடியாது என்ற நிலையை திமுக அரசு ஏற்படுத்தியிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத் திற்கும் ஓர் அரசு மருத்துவக் கல்லூரி என்ற கனவை நனவாக்கவே முடியாத பின்னடைவை திமுக அரசு ஏற்படுத்தியிருக்கிறது. புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்காக விண்ணப்பிக்காதது ஏன்? என்பது குறித்து தமிழக அரசு இதுவரை அதிகாரப்பூர்வமாக விண்ணப்பிக்கவில்லை. ஆனால், மத்திய அரசு நிதியுதவியுடன் அரசு மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க முயற்சி செய்து வருவதால் தான் இப்போது புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கவில்லை என்று அரசு சார்பில் அதிகாரப்பூர்வமற்ற வகையில் விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. இது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

அரசு அல்லது தனியார் மருத்துவக் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கும் திட்டத்தை கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் 3 கட்டங்களாக மத்திய அரசு செயல்படுத்தியது. இத்திட்டத்தின்படி மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான செலவில் மத்திய அரசு 60 விழுக்காட்டையும், மாநில அரசு 40 விழுக்காட்டையும் பகிர்ந்து கொள்ளும். இத்திட்டத்தின்படி முதல் இரு கட்டங்களில் அனுமதிக்கப்பட்ட 82 மருத்துவக் கல்லூரிகளில் ஒன்று கூட தமிழகத்திற்கு கிடைக்கவில்லை. மூன்றாம் கட்டமாக 75 மருத்துவக்கல்லூரிகள் அறிவிக்கப்பட்ட போது, அவற்றில் 15 மருத்துவக் கல்லூரிகள் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று பா.ம.க. தான் முதன்முதலில் வலியுறுத்தியது. அதைத் தொடர்ந்து தமிழக அரசு மேற்கொண்ட முயற்சிகளால் தமிழகத்திற்கு மொத்தம் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் கிடைத்தன. அந்தத் திட்டம் முடிவுக்கு வந்து விட்ட நிலையில், இனி மத்திய அரசு உதவியுடன் தமிழ்நாட்டில் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்க வாய்ப்பில்லை.

இந்த உண்மையை மறைத்து விட்டு, மத்திய அரசு உதவியுடன் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்போவதாக தமிழக அரசு கூறுவது மக்களை ஏமாற்றும் செயலாகும். 3 ஆண்டுகள் ஏற்கனவே முடிவடைந்து விட்ட நிலையில், புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால், ஐந்தாண்டுகளில் ஒரு மருத்துவக் கல்லூரியைக் கூட தொடங்காத அரசு என்ற அவப்பெயரை இன்றைய அரசு சுமக்க நேரிடும். எனவே, தேசிய மருத்துவ ஆணையத்திடம் சிறப்பு அனுமதி பெற்று, 6 மாவட்டங்களிலும் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை தமிழக அரசே அதன் சொந்த நிதியில் தொடங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

**Dr.R.Kannan, Chairman**

M.S., DNB(SGE), FICS(Gastro)., FAIS., FMAS., FIAGES., FACRSI., FIMSA., DMAS (France)., FALS (UGI)., FALS(HPB)., FALS (Colorectal)., FALS (Hernia)

**இரைப்பை, குடல், கல்லீரல் மற்றும் லேப்ராஸ்கோப்பி அறுவை சிகிச்சை நிபுணர்**

**Consultant Surgical Gastroenterologist & Colorectal Surgeon**
**Advanced Laparoscopy and Hepato Panrcreato Biliary Surgeon**
Mob : 94448 71816, 87545 90999
Consultation : Morn: 10:00 am to 1:00 pm Even : 8:00 pm to 9:00 pm
No.1051, Poonamalles High Road, Arumbakkam, Chennai - 600 106.
Ph : 044-23639999 / Mob : 98844 93140
*Email : gastrochennai@gmail.com*
*www.chennaigastro.com / www.primeindianhospitals.com*




# குடலிறக்கம் HERNIA

நம் உடம்பில் காணப்படும் குறைபாடுகளில் ஹெர்னியா (Hernia) எனப்படும் குடலிறக்கம் மிக முக்கியமானதாகும். ஆனால் குடலிறக்கத்தைப் பற்றி சரிவரத் தெரியாததால், இதனால் பாதிப்புகள் ஏற்பட்டப் பின்னரே நிறையபேர் அறுவைசிகிச்சை செய்து கொள்வார்கள். இவற்றைப் பற்றி நாம் இங்கு இன காணலாம்.

### 1.ஹெர்னியா (குடலிறக்கம்) என்றால் என்ன?

நமது வயிற்றுப் பகுதியில் உள்ள தசைநார்கள் பழுது அடைந்து இருந்தாலோ அல்லது பிறவிலேயே தசை பழுது அடைந்து ஓட்டையுடன் இருந்தாலோ,




ஹெர்னியா வகைகள்




இங்குய்னல் குடலிறக்கம்



தொப்புள் குடலிறக்கம்
அடைப்புடன்
(அறுவை சிகிச்சைக்கு முன்பு)



தொப்புள் குடலிறக்கம்
(அறுவை சிகிச்சைக்கு பின்பு)

வயிற்றின் உள் இருக்கும் குடல் இதன் வழியாக இறங்கி வருவதையே குடலிறக்கம் என்கிறோம்.



தொப்புள் குடலிறக்கம்

**2.ஹெர்னியா ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன?**

இதற்கு முக்கியமாக கீழ்க்கண்ட காரணங்களைக் கூறலாம்.

- தொடர் இருமல் (Whooping Cough in children, Chronic Cough in TB Patients)
- சிறுநீர் அடைப்பு வியாதிகள் (Prostate வீக்கம் மற்றும் சிறுநீர்ப்பாதை சுருக்கம்)
- மலச்சிக்கல்
- உடல் பருமன்
- அதிகமான எடை மற்றும் பளு தூக்குதல்
- அடிக்கடி குழந்தை பெறுதல்

**3.ஹெர்னியா எந்த வயதில் வரும்?**

ஹெர்னியா பிறந்த குழந்தை முதல் எந்த வயதினருக்கும் ஆண், பெண் வித்தியாசம் இல்லாமல் வரும் சிறுவர்களுக்கும், இளம் வயது ஆண்களுக்கும் அதிகளவு வரும்.



வெட்டுசார் குடலிறக்கம்

**4.ஹெர்னியா எத்தனை வகைப்படும்?**

ஹெர்னியா உடம்பில் வரும் இடத்தைப் பொருத்து பலவகைப்படும். இதில், Inguinal Hemia, Umbilical Hernia, Incisional Hernia, மற்றும் Femoral Hernia போன்றவை முக்கியமானவை.

**5.Inguinal Hernia என்றால் என்ன?**

ஆண் குழந்தை கர்ப்பத்தில் இருக்கும் போது விரைகள் வயிற்றின் பின் சுவர் பக்கத்தில் இருக்கும். பின் அது Inguinal Canal எனப்படும் பாதை வழியாக நகர்ந்து கீழிறங்கி விதைப்பைக்குள் சேரும். அதன் பின்னர் அப்பாதை பெரும்பாலும் மூடிக்கொள்ளும். அவ்வாறு மூடாவிட்டால் வயிற்றில் உள்ள குடல் இறங்கி வருவதையே Inguinal Hernia என்கிறோம். இதுவே முக்கியமான ஹெர்னியா வகை (75%) ஆகும்.

### 6.Inguinal Hernia எங்கே வரும்?

அடிவயிற்றில் இடுப்புப் பகுதிக்கு கீழே வரும். ஆண்களுக்கு பெண்களை விட 20 மடங்கு அதிகமாக வரும். இடது புறத்தை விட வலதுபக்கம் மூன்றில் இரண்டு மடங்கு அதிகம் வரும். ஆரம்பத்தில் மாலை நேரத்தில் வீக்கம் இருக்கும். படுத்து காலையில் எழுந்தால் வீக்கம் முழுவதுமாக மறைந்து விடும்.

### 7.தொப்புள் குடலிறக்கம் என்றால் என்ன?

தொப்புள் கொடியில் ஏற்படும் குறைபாடுகள் காரணமாக குடலிறக்கம் ஏற்படும். ஆனால் குழந்தைகளுக்கு 12 முதல் 18 மாதங்களுக்குள்ளாகவே பெரும்பாலும் மூடிக்கொள்ளும். அவ்வாறு மூடாவிட்டால் அறுவை சிகிச்சை அவசியம். மேலும் மற்ற வயதினருக்கு Umbilical Hernia -வுக்கு அறுவை சிகிச்சை கண்டிப்பாக செய்ய வேண்டும். இது ஆண்களை விட பெண்களுக்கு ஐந்து மடங்கு அதிகமாக வரும்.

### 8.Femoral Hernia என்றால் என்ன?

வயிற்றுக்கு கீழே தொடைப்பகுதியில் வரும் ஹெர்னியா பெமரல் ஹெர்னியா ஆகும். இது ஆண்களை விட பெண்களுக்கு அதிகமாக வரும்.

### 9.Incisional Hernia (வெட்டுசார் குடலிறக்கம்) என்றால் என்ன?

வயிற்றில் ஒரு முறை செய்த அறுவை சிகிச்சைக்குப் பிறகு, பக்க தசைகள் பலவீனப்பட்டு தையல் விட்டுப் போனால் (உதாரணம்: சிசேரியன், கர்ப்பப்பை அகற்றுதல், குடல்வால் நீக்குதல், கேன்சர் ஆபரேசன்) ஹெர்னியா உருவாகும். இதனையே Incisional Hernia என்கிறோம்.

### 10.Hernia -வை மருந்தால் குணப்படுத்த முடியுமா?

ஹெர்னியாவை மருந்தால் குணப்படுத்த முடியாது. அதற்கு அறுவை சிகிச்சையே நிரந்தர தீர்வு இதனை சாதாரண அறுவை சிகிச்சை (Open Method) முறையிலும், லேப்ராஸ்கோப்பி (Laparoscopic Method) அறுவை சிகிச்சை முறையிலும் செய்யலாம்.

### 11. ஹெர்னியாவால் ஏற்படும் பாதிப்புகள் என்னென்ன?

ஹெர்னியா உள்ள இடத்தில் வீக்கத்துடன் வலியும் உண்டாகும். சில நேரங்களில் வெளியே வந்த குடல் மீண்டும் வயிற்றுக்குள் திரும்பாது. இதனை Irreducible hernia என்கிறோம். ஒரு சிலருக்கு வெளியே வந்த குடல் அடைத்துக் கொள்ளும். இதனை Obstructed Hernia என்கிறோம். மேலும், ஒரு சிலருக்கு அடைப்பட்டக் குடல் அழுகிப் போகும். இவை மூன்றுமே ஆபத்தானவை இவைகளுக்கு உடனடியாக அறுவை சிகிச்சை செய்யவேண்டும்.

### 12.Incisional Hernia ஏன் ஏற்படுகிறது?

இதற்கு வயிற்று சுவர் வலிமை இழந்துப் போவது தான் முக்கிய காரணமாக சொல்லப்படுகிறது. மேலும்

1.அறுவை சிகிச்சை செய்த இடத்தில் நோய்த் தொற்று ஏற்படுதல் (Infection)

2.உடலில் புரதச்சத்து குறைதல்

3.அறுவை சிகிச்சைக்குப் பிறகு சரியான ஓய்வின்மை

4.அளவுக்கதிகமான உடற்பயிற்சி மற்றும் வேலைப்பளு

5.இரத்த சோகை நோய் (Anaemia)

6.உடல் பருமன் போன்ற காரணங்களால் Inci-



வெட்டுசார் குடலிறக்கம் (அறுவை சிகிச்சைக்கு முன்பு)



அறுவை சிகிச்சையின்போது



வெட்டுசார் குடலிறக்கம் (அறுவை சிகிச்சைக்கு பின்பு)

sional Hernia உருவாகிறது.

### 13.எல்லா வகை ஹெர்னியாவுக்கும் லேப்ராஸ்கோப்பி முறை நல்லதா?

ஹெர்னியாவில் ஏற்படும் பாதிப்புகளுக்கு (Obstructed Hernia, Strangulated Hernia, Huge Inguinal Hernia மற்றும் Large Incisional Hernia-க்கு லேப்ராஸ்கோப்பி முறை சிறந்ததல்ல. மற்ற வகை ஹெர்னியாவுக்கு லேப்ராஸ்கோப்பி சிறந்த முறையாகும்.

### 14.லேப்ராஸ்கோப்பி முறையில் ஹெர்னியா எவ்வாறு சரிசெய்யப்படுகிறது?

சிறுதுளைகள் மூலம் லேப்ராஸ்கோப்பி கருவியை வயிற்றுப்பகுதியில் செலுத்தி, குடலிறக்கப் பகுதியில் உள்ள குடலை வயிற்றுக்குள் தள்ளி, அந்த இடத்தில் Mesh வைத்து சரிசெய்யப்படுகிறது. இதன் மூலம் நார் போன்ற திசுக்கள் அந்த வலையோடு சேர்ந்து கெட்டியான சுவராக உருவாகி, தளர்ந்து போன வயிற்றுச்சுவரை பலப்படுத்திவிடும். இதனால் மீண்டும் ஹெர்னியா வர வாய்ப்பில்லை.

### 15.வயிற்றுக்குள் Mesh வைப்பதால் எந்த பாதிப்புகளும் வராதா?

வயிற்றுக்குள் Sterlized Mesh ஐ வைப்பதால் எந்த பாதிப்பும் வராது. Inguinal Hernia -வுக்கு Prolene Mesh பயன்படுத்தப்படுகிறது. ஆனால் Incisional Hernia மற்றும் Umbilical Hernia வுக்கு Bilayered Mesh பயன்படுத்தப்படுகிறது. (Proceed / paritex) இதில் உள்ள ஒரு லேயர் குடலோ அல்லது கொழுப்போ ஒட்டாத வாறு பாதுகாக்கப்படுகிறது. மற்றொரு லேயர் வயிற்றுத் தசையை மேலும் வலிமையாக்குகிறது.

### 16.லேப்ராஸ்கோப்பி முறையில் செய்தால் என்ன நன்மைகள்?

லேப்ராஸ்கோப்பி முறையில் செய்தால் வலி அதிகம் இருக்காது. சிறு தழும்புதான் இருக்கும். ஒன்று, இரண்டு நாட்களிலேயே வீட்டிற்கு செல்லலாம். மேலும் நான்கு அல்லது ஐந்து நாட்களிலேயே நாம் அன்றாட வேலைகளை செய்ய இயலும்.

### 17.ஹெர்னியாவுக்கு ஆபரேசன் செய்தபிறகு நாம் மீண்டும் பழையமாதிரியே வேலை செய்ய முடியாது என்று கூறுகிறார்களே. அது உண்மையா?

இது முற்றிலும் தவறான கருத்தாகும். இந்த நவீன மருத்துவ உலகில் உள்ள புது புது முறைகளிலும், மேலும் தசைப்பகுதியை வலுவூட்டக் கூடிய பலவகைப்பட்ட Mesh-ஐ (Prolene, Bard, Vipro, Proceed, Parietex) வைத்து சரிசெய்யும் போதும், எந்த குறைபாடும் வராது. ஹெர்னியாவும் மீண்டும் வராது. நாம் எல்லா வகையான வேலைகளையும் (உதாரணம் : பளுதூக்குதல் மற்றும் கடுமையான உடற்பயிற்சி) மற்றவர்களைப் போல சாதாரணமாகச் செய்யலாம்.

### 18.ஹெர்னியா ஆபரேசன் செய்தபிறகு என்ன செய்ய வேண்டும்?

சாதாரண முறையில் அறுவைசிகிச்சை செய்து கொண்டால்

1.இரண்டு வாரங்கள் வரை கடுமையான வேலைகள் செய்யக்கூடாது.

2.நீண்ட பயணம் தவிர்க்க வேண்டும்

3.இருமல் மற்றும் காய்ச்சல் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

### 19.ஹெர்னியா வராமல் தடுக்க என்ன செய்ய வேண்டும்?

1.மலச்சிக்கல் தவிர்த்தல்

2.நீண்ட நாள் இருமலுக்கு தகுந்த சிகிச்சை எடுத்தல்

3.சிறுநீர் பாதை அடைப்பு வராதவாறு பார்த்துக் கொள்ளுதல்

4.அதிக எடையுள்ள பொருள்களை தூக்குவதைத் தவிர்த்தல்

5.உடல் பருமன் அடையாமல் பார்த்துக் கொள்ளுதல்

6.புகைப்பிடித்தல் மற்றும் மதுப்பழக்கத்தை விட்டு விடுதல்.

**மேலும் விவரங்களுக்கு...**

Prime Indian Hospitals
Changing Lives...
1051, Poonamallee High Road,
Arumbakkam, Chennai-600 106
Ph : 91-44-2363 9999, 91 98844 93140
Email: *chairman@primeindianhospitals.com*
*primeindianhospitals@gmail.com*

Life Care
DKJ Hospital
CARE... with love
177/3, M.T.H. Road, Villivakkam, Chennai - 49.
Ph : 044-26180099, 044-43577755,
8754590905
email: *chennaigastro@gmail.com*
Web: www.chennaigastro.com
www.chennaigastroenterlogist.com

# இந்தியாவில் முதல் தலைமுறை வழக்கறிஞர்கள் எதிர்கொள்ளும் சவால்களும்! சங்கடங்களும்!!

**முதல் தலைமுறை வழக்கறிஞராக இருக்கும் அதே வேளையில் ஒரு வெற்றிகரமான வழக்கறிஞராக மாறுவதற்கான போராட்டம் அவ்வளவு எளிதானது அல்ல, குறிப்பாக இந்தியா போன்ற ஒரு நாட்டில். சட்டப் பூர்வப் பின்னணி கொண்ட வழக்கறிஞராக இருந் தாலும் சரி, முதல் தலைமுறை வழக்கறிஞராக இருந்தாலும் சரி, சட்டத் துறையில் உறுதியான தொழிலை உருவாக்குவது எளிதான வேலையாக இருந்ததில்லை, இருப்பினும், சட்டம் தொடர்பான கலாச்சாரங்கள் மற்றும் பின்னணியில் பிறந்தவர்கள் அதிகம் இடம் பெறுகிறார்கள் என்பதை மறுக்க முடியாது.**

முதல் தலைமுறை வழக்கறிஞரை விட சிறந்த இடம். இதற்குக் காரணம், பழமையான சட்டப் பயிற்சி மற்றும் சட்டப் பின்னணியில் தங்கக் கரண்டியுடன் பிறந்தவருக்கு வழங்கப் படும் சிறப்பு சிகிச்சை. ஒரு சட்டக் குடும்பத்தில் பிறந்த ஒருவர் சட்டத்தின் அடிப்படைகளை நன்கு அறிந்தவர், சட்டப் பிரச்சினைகளை நிர்வகிப்பதில் வெளிப்பாட்டைக் கொண்டவர் மற்றும் வாடிக்கையாளர்களைக் கையாள்வதில் மறைமுகமாகச் சந்திப்பார். வழக்கறிஞர்கள் அல்லது நீதிபதிகளின் குடும்பத்தில் ஒரு வழக்கறிஞராக இருப்பது, ஒரு சட்ட மாணவர் தங்கள் வாழ்க்கையில் தேர்ச்சி பெறுவதற்குத் தேவையான திறன்களைக் கடந்து செல்கிறது, வாடிக்கையாளர்களும் கூட அடுத்த தலைமுறைக்கு அனுப்பப்படுவார்கள். வழக்கமாக, சட்டப்பூர்வ பரம்பரையைக் கொண்ட ஒரு வழக்கறிஞர் அவர்களின்



குடும்பப் பின்னணியின் பலனைப் பெறுகிறார், அங்கு அவர்கள் புதிய இணைப்புகளை உருவாக்கவோ அல்லது முதல் தலைமுறை வழக்கறிஞருடன் ஒப்பிடும்போது அதிக கடின உழைப்போ செய்ய வேண்டிய தில்லை, ஏனெனில் அவர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து நல்ல வழிகாட்டுதலைக் கொண்டுள்ளனர்.

மறுபுறம், முதல் தலைமுறை வழக்கறிஞர்கள் சட்ட உலகில் புதிய இணைப்புகளை உருவாக்க வேண்டும்,





மேலும் சட்ட ஒளிக்கு ஏற்ப அவர்களுக்கு அதிக நெட்வொர்க்கிங் திறன்கள் அல்லது அறிவு இல்லை. அவர்கள் வழிகாட்டுதல் அல்லது புறக்கணிக்கக்கூடிய வழிகாட்டுதல் இல்லாமல் உள்ளனர். ஒவ்வொரு முதல் தலைமுறை வழக்கறிஞருக்கும் போதிய தகவல் மற்றும் சட்ட இணைப்புகள் இல்லாத முக்கிய விசைகள். ஒருவருக்கு சட்ட விஷயங்களில் நிபுணத்துவம் பெறுதல் மற்றும் நிபுணத்துவம் பெறுதல் ஆகியவற்றின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று அவரது சொந்த நடைமுறையின் மூலம் ஒரு இணைப்பை உருவாக்க வேண்டும். முதல் தலைமுறை வழக்கறிஞருக்கான இந்த இணைப்புகள் வர பல ஆண்டுகள் ஆகும் அல்லது ஒரு முறை படிப்படியாகக் கூடியது.

முதல் தலைமுறை வழக்கறிஞருக்கான சாத்தியமான போரின் மற்றொரு பகுதி நீதிமன்ற அறைக்குள் நடக்கிறது. சிக்கலான பிரச்சினைகளுக்குப் பதிலளிப்பதற்கும் நீதிமன்றங்களில் சித்தரிப்பதற்கும் முன் ஒரு உயர்மட்ட வழக்கறிஞரின் மகன் அல்லது மகள் இருப்பது நம்மில் பலருக்குத் தெரிந்த ஒரு கலாச்சாரம். எந்த சிரமமும் இல்லாமல், அத்தகைய வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் தங்கள் இருப்பைக் குறிக்கிறார்கள் மற்றும் சில அற்புதமான வழக்குகளில் நீதிமன்ற நடைமுறைகளைக் கையாள்வதில் பயனுள்ள தேர்ச்சியைப் பெறுகிறார்கள் மற்றும் சட்ட உலகில் தங்கள் பெயரைப் பெறுகிறார்கள். பட்டியில் இருந்து அதிக எண்ணிக்கையிலான சட்டப்பூர்வ கூட்டாளிகள், மூத்த மற்றும் ஜூனியர் தனிநபர்களால் பார்க்கப்பட்ட இத்தகைய சட்டபூர்வமான சித்தரிப்பு, இது போன்ற உண்மையான நன்மைகள் மற்றும் வாடிக்கையாளர்களின் வயதில் குறிப்பிடப்பட்ட சிக்கல்களைக் கையாளுதல் ஆகியவை பெரும்பாலும் முதல் தலைமுறை வழக்கறிஞர்களிடையே இல்லை.

முதல் தலைமுறை வழக்கறிஞர்களுக்கான ஆட்சேர்ப்பு தடைகள், சட்டப்பூர்வ இடத்தில் வாழ்வதற்கு மிகவும் சிக்கலான நடைமுறைகளில் ஒன்றாக உள்ளது. தனிப்பட்ட அனுபவத்திலிருந்து எழுதுவது, பல சட்ட நிறுவனங்களில் பணியமர்த்துவதற்கான செயல்முறைக்கு ஒரு சிறந்த பதவிக்கு வருவதற்கு உறுதியான இணைப்பு அல்லது குறிப்பு தேவைப்படுகிறது. கூட, சட்டப் பள்ளியில் இன்டர்ன்ஷிப்பைப் புரிந்துகொள்வதற்கு, தொழிலில் வலுவான இணைப்பு தேவை. எனவே, முதல் தலைமுறை வழக்கறிஞருக்கு சட்டத்தைத் தொடரும் அவரது கனவுகளை நனவாக்க சில கடினமான மற்றும் முடிவற்ற சவால்கள் உள்ளன என்பது உண்மையாகவே உள்ளது.

முதல் தலைமுறை வழக்கறிஞர்கள் எதிர் கொள்ளும் பல்வேறு சவால்கள் பின்வருமாறு:

முதல் தலைமுறை வழக்கறிஞரின் தொழில் தேர்வுகளைக் கட்டுப்படுத்தும் நிதிச் சுமைகள்: நிதி ரீதியாக வலுவாக உள்ளவர்கள் ஆர்வமுள்ள தொழிலைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் தங்கள் இலக்கை அடையலாம். சில வழக்குகள் அவர்கள் பொருளாதார ரீதியாக வலுவாக இருப்பது போல் இருக்கும், ஆனால் வழக்குரைஞர் தொழில் அவர்களின் ஆர்வமாக இல்லை, ஆனால் சில வழக்குகள் அவர்கள் நிதி ரீதியாக பலவீனமாக இருப்பது போல் இருக்கும், ஆனால் வழக்கறிஞர் தொழில் அவர்களின் ஆர்வம். நிதி அல்லது பணமின்மை காரணமாக, அவர்களால் வெற்றி யிலிருந்து விலகிச் செல்லும் பாதையைத் தேர்ந்தெடுக்க முடியவில்லை.

குடும்பத்தின் ஆதரவு இல்லை: புதிய தலைமுறை வழக்கறிஞர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனை இதுவாகும், ஏனெனில் அவர்கள் தங்கள் தொழிலில் குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு இல்லாததால் வேலையில் தனிமைப்படுத்தப்படுகிறார்கள்.

அந்நியர்களிடம் சிக்கி இருந்த அநேகம் மன்னவேடு கிராமங்களை, தனது சுய சம்பாத்தியப் பணத்தை செலவு செய்தும், சட்டப் போராட்டங்கள் மூலமாகவும், சமாதானம் மூலமாகவும், மீட்டு வன்னியர்கள் வசம் ஒப்புவித்து, அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பினை செய்து தந்தவர். தனி ஒரு நபராக நின்று, ஆதிக்க சாதியினர் ஆதிக்க சக்தியினர், மற்றும் அரசு அதிகார வர்க்கம் ஆகிய மூன்று சக்திகளையும் எதிர்த்து துணிச்சலோடு போராடியவர். பாரம்பரியமாகத் தொடர்ந்து வரும் சாதிய ஆதிக்கம் எவ்வகையில் பொருளாதார ஆதிக்க வடிவம் பெறுகிறது என்பதை இவருடைய நூலான “பாயாக்காரிகள் மிராசுதாரர்களோடு செய்த போராட்டம்” என்பதில் இருந்து தெரிய வருகிறது. பெரியாருக்கு முன்னோடியாக, ஒடுக்கப்பட்ட பறையர் சமூகத்திற்கு அயோத்திதாச பண்டிதரும், வன்னியர் சமூகத்திற்கு வேங்கடாசல நாயக்கரும் போராடியிருக்கிறார்கள். ஆனால், அயோத்திதாச பண்டிதர்க்கு கிடைத்த அங்கீகாரம் இவருக்குக் கிடைக்காததற்குக் காரணம், இவர் சார்ந்த வன்னிய இனம் அரசியல் அதிகாரம் பெறாததே.

வன்னிய அரசியல் தலைவர்களில் இன்றைக்கும் துருவ நட்சத்திரமாக ஒளி வீசிக் கொண்டிருப்பவர் உழைப்பாளர் கட்சியை உருவாக்கிய கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த இராமசாமிப் படையாச்சியார் ஆவார். இந்தியாவில் நடைபெற்ற முதல் சட்டமன்ற தேர்தலில் போதுமான இடங்களை வன்னியர்களுக்கு ஒதுக்க காங்கிரஸ் பேரியக்கத்தின் அன்றைய தலைவர்கள், சுயநல நோக்கோடு மறுத்தபோது, துணிந்து தனிக்கட்சி கண்டவர். மாநிலக் கட்சிகள்

மனம் வைத்தால், மத்தியில் ஆளும் கட்சியை மண்டியிடச் செய்ய முடியும் என்பதை சுதந்திர இந்தியாவுக்கு உணர்த்திய சரித்திர புருஷர். அவரும் வேலூரில் மாணிக்க வேலு நாயக்கரும், திருத்தணியில் ஏ.கே. விநாயகம் பிள்ளையும் எழுப்பிய வன்னிய சங்கநாதம் காங்கிரஸ் பேரியக்கத்தை கலகலக்க வைத்தது. விளைவு 1952இல் நடைபெற்ற முதல் சட்டமன்ற தேர்தலில் தமிழ்நாட்டைத் தவிர எல்லா மாநிலங்களிலும், விடுதலை வாங்கித் தந்த இயக்கம் என காங்கிரசை மக்கள் ஆரத்தி எடுத்து வெற்றிக் கனியை அளித்த போது. தமிழ்நாட்டில் பெரும்பான்மை கிடைக்கப் பெறவில்லை. அந்த இக்கட்டான சூழ்நிலையைச் சமாளிக்க, கவர்னர் ஜெனரலாக இருந்த இராஜாஜி அவர்கள் ஓடோடி வந்து, தமிழகத்தில் வன்னியர்களோடு இணைந்து, கூட்டணி மந்திரி சபையை அமைத்தது இன்றைக்கும் மறக்க முடியாத வன்னியர்களின் வெற்றி வரலாறு. குலக் கல்வித் திட்டத்தால், தனது முதல்வர் பதவியை இராஜாஜி அவர்கள் இழந்து, காமராஜர் அவர்கள் முதலமைச்சர் ஆனபோது, உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தவர். அவரது வன்னியர் இனத் தலைமையும், மனதில் பட்டதை வெளிப்படையாகப் பேசும் தைரியமும், சிறுபான்மையினர் தலைமை ஏற்றால் பெரும்பான்மையினரை வளர விட மாட்டார்கள் என்ற கள யதார்த்தமும் இவரது அரசியல் வாழ்க்கை சோபிக்க விடாமல் தடுத்து விட்டன.



இவருக்குத் துணை நின்றவர் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த 100 ஆண்டுகள் நிறைவான வாழ்க்கை வாழ்ந்த பெரியவர் மாணிக்க வேல் நாயக்கர் ஆவார். அப்பொழுதே சட்டம் பயின்றவர். குற்றப் பிரிவு என்று வகைப்படுத்தப்பட்ட வன்னியர்களை, தனது நிர்வாகத் திறமையால், அதிலிருந்து மீட்டுக் கொணர்ந்தவர். வருவாய்த் துறை அமைச்சராகவும், தமிழக சட்டமன்ற சபாநாயகராகவும், இருந்து அனைவரது மதிப்பையும் பெற்றவர். அண்மையில், வட ஆற்காடு வன்னியர் சங்கம் அவருக்கான சிலையை நிறுவி அவர் புகழுக்குப் பெருமை சேர்த்தது. தனது சாதிய அடையாளத்தை துறந்த காரணத்தால், தனது அடையாளத்தை இழந்து அரசியலில் சூரியனாய் ஜொலிக்க வேண்டியவர் இரவில் மின்னும் நட்சத்திரமாய் மாறிவிட்டவர்.

எம்.பி. சுப்பிரமணியம் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் இரண்டு முறை சட்ட மன்ற உறுப்பினராக வென்றவர். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக 1980 முதல் 1983 வரை இருந்தவர். கம்ப்யூட்டரைப் போல கூர்த்த மதியினர் என அனைவராலும் பாராட்டப் பெற்றவர். சுயேச்சை வேட்பாளராக 1952இல் வென்று, பிறகு 1957இல் தி.முக.வில் சேர்ந்து, 1960இல் ஈ.வி.கெ. சம்பத் அவர்களுடன்

காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்தார். பிறகு நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தொடங்கிய தமிழக முன்னேற்ற முன்னணி கட்சியின் தலைவராக இருந்து, மீண்டும் காங்கிரசில் சேர்ந்து, 1998இல் தென் சென்னை பாராளுமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார். அரசியல் சூதாட்டத்தில் தாயம் கிடைக்காத தலைவர்.

தளபதி கே. விநாயகம் பிள்ளை தமிழகத்தின் வடக்கெல்லைப் போராட்ட தியாகி. வடக்கெல்லை போராட்டக் குழு தலைவராக சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்கள் இவரைப் பற்றிக் கூறியது இத்தருணத்தில் நினைவு கூறத்தக்கது. “வடக்கெல்லை மீட்சிக்கான பயணத்தை

மேற்கொண்டபோது, தெலுங்கர்கள் கடுமையாக எதிர்த்தனர். திருத்தணியில் எந்த சத்திரத்திலும் கூட்டம் நடத்த விடாமல் தடுத்தபோது, வன்னியர் சத்திரத்தைக் காட்டி, இதிலே கூட்டத்தை நடத்துங்கள். திருத்தணி மீட்புக்கு வன்னியர்கள் துணை நிற்கிறோம்.

தெலுங்கர்கள் வந்தால் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று மிகுந்த துணிச்சலோடு கூறினார்.

அந்த வன்னிய சத்திரத்தில் அந்த இளைஞனின் கனல் பறக்கும் பேச்சு மக்களை உணர்ச்சிப் பிழம்பாக்கியது. அந்த முதல் சந்திப்பிலேயே விநாயகத்தின் மீது எனக்கு ஈர்ப்பு ஏற்பட்டுவிட்டது. வடக்கெல்லைப் போராட்டத்தில் தொடர்ந்து 14 ஆண்டுகள் என்னோடு தோளோடு தோள் நின்று, போராடினார். இதனால், நான் அவரைத் தளபதி என்று அழைத்தேன்." திரு விநாயகம் காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏ. ஆகவும், அக்கட்சியின் கொறடாவாகவும் இருந்தவர். அறிஞர் அண்ணாவுக்கு அவர் மீது, ஈர்ப்பு உண்டு. அறிஞர் அண்ணாவைப் பார்த்து "Your days are numbered" என்று இவர் கூற, அதற்கு அவர் My Steps are measured என்று அவர் பதிலிறுத்தது சட்டமன்ற விவாதத்தின் உச்சகட்ட உரையாடல். "தமிழகத்தின் அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர் அவர்" என்று அவரை அண்ணா அழைத்தார். காங்கிரஸ் கட்சியின் வீழ்ச்சி, இவரைப் போன்ற பல எழுச்சி மிக்க தலைவர்களை, பொது வாழ்வில் சந்தர்ப்பம் இழக்கச் செய்தது.

"பேரறிஞர்" ஆனைமுத்து எனப் பெரியாரால் பாராட்டப் பெற்றவர்.

"மண்டல் கமிஷன் அமைந்ததற்கும், அதன் பரிந்துரைப்படி மத்திய அரசில் இதர பிற்பட்டோருக்கு 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு அமலானதற்கும், உண்மையான சொந்தக்காரர் வே.ஆனிமுத்து" என துக்ளக் இதழாசிரியர் "சோ"ஆல் பாராட்டப் பெற்றவர் இவர். பெரம்பலூர் மாவட்டத்தில், குருக்கன்குடி என்ற ஊரில் பிறந்தவர். உழைப்பாளர் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட ஆ.கோவிந்தசாமி படையாச்சியாரின் (பின்னாளில் திமுக அமைச்சர்) சட்டமன்ற தேர்தல் வெற்றிக்காக உழைத்தவர். ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தான் பார்த்த அரசு வேலையை, திராவிடர் கழகப் பணிக்காகத் துறந்தவர்.

பெரியாரின் அரசமைப்புச் சட்ட எரிப்புப் போராட்டத்தில் பங்கேற்று 18 மாதம் சிறைத் தண்டனையை வேலூர் சிறையில் அனுபவித்தவர். பெரியாரின் சிந்தனைகளை நூல் வடிவில் வெளியிட அரும்பாடு பட்டவர். காலக்கொடுமையால், பெரியார் இறந்த ஓராண்டுக்குள், திராவிடர் கழகத்தை விட்டு, வெளியேற்றப்பட்டவர். தனது சமூகப் பணியை மடை மாற்றி, ஒடுக்கப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு பெறுவதில் ஈடுபட்டு, அதற்காகப் பெரு முயற்சி மேற்கொண்டு அதிலே மாபெரும் வெற்றி கண்டவர். 1978இல் இந்திய ஜனாதிபதி, பிரதமர் மொரார்ஜி தேசாய், எதிர்க்கட்சித் தலைவர் இந்திராகாந்தி ஆகியோரைச் சந்தித்து, ஆங்கிலம், இந்தி போன்ற மொழிகளில் இட ஒதுக்கீடு கொள்கைளை விளக்கும் விரிவான துண்டறிக்கைகளை வெளியிட்டவர்.

இவருக்கு ஜனதா கட்சியைச் சேர்ந்த இராம் அவதேஷ் சிங், எம்.பி., வாழப்பாடி இராமமூர்த்தி எம்.பி., மண்டல் எம்.பி. ஆகியோர் உதவிட முன் வந்தனர். ஆனைமுத்து குழுவினர் இராம் அவதேஷ் சிங் குழுவினருடன் இணைந்து, பீஹாரில் 1978ஆம் ஆண்டு நடத்திய பிரச்சாரத்தாலும், சிறை நிரப்புப் போராட்டத்தாலும், பீஹார்

அரசு பிற்பட்டோருக்கு 20 சதவிகித இட ஒதுக்கீட்டை அளித்தது. அதைத் தொடர்ந்து, பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களில் 1978-79 ஆண்டுகளில் முதன் முறையாகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அரசாங்கப் பணிகளில் இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது.

1979 ஆம் ஆண்டு மாலீ;ச்சு மாதம் புது டில்லியில் பெரியார் நூற்றாண்டு விழாவையும், ராம் மனோகர் லோகியாவின் பிறந்த நாளையும் முன்வைத்து, ஆனைமுத்து அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டம் மற்றும் பேரணியில், ஆனைமுத்து அவர்களின் இட ஒதுக்கீடு கருத்துக்களை இந்தியில் மொழி பெயர்த்து, மத்திய அமைச்சர் இராஜ் நாராயண் வெளியிட்டார். அந்த கூட்டத்தில் துணைப் பிரதமர் ஜெகஜீவன்ராம் அவர்கள் கலந்து கொண்டார். நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் 1979 இல் பி.பி. மண்டல்



சொல் அம்பலம் ஏறாது என்பதற்கு இவர் அடையாளம் இவர்.

"எந்த நாட்டிலுமே ஆதிக்கம் செலுத்தப் புகும் பரதேசிகள் அந்த நாட்டிலுள்ள சுதேசிகளை நம்புவதில்லை, தங்களைப் போன்ற பரதேசிகளையே நம்புவார்" என்று கூறிய சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களது வாக்கு

தலைமையில் இரண்டாவது பிற்பட்டோர் குழுவை நியமித்தார்.

31.12.1980இல் பி.பி. மண்டல் தனது அறிக்கையை பிரதமர் இந்திரா காந்தியிடம் அளித்தார். ஆனால் நடவடிக்கை இல்லை. குடியரசு தினத்தில் கறுப்புக்கொடி ஏற்றுவோம் என்று ஆனைமுத்து அவர்கள்

அறிவித்ததும், மத்திய உள்துறை அமைச்சர் கியானி ஜெயில் சிங், அவரை அழைத்துப் பேசி மண்டல் குழு அறிக்கையை பாராளுமன்றத்தில் வெளியிட்டார். தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களிலும், பகுஜன் சமாஜ் கட்சி மற்றும் சாதி, சமூக, அரசியல் கட்சிகள் என அனைவரும் இட ஒதுக்கீட்டிற்காகப் போராடினார். இறுதியாக, 13.8.1990இல் மத்திய அரசிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும் உள்ள வேலை வாய்ப்பில் 27 சதவிகித இட ஒதுக்கீடு செய்து, பிரதமர் வி.பி.சிங் ஆணை பிறப்பித்தார். அதற்கு விலையாக தனது பிரதமார் பதவியை இழந்தார். பெரியாரே தனது வாழ்க்கை என வாழ்ந்த பேரறிஞர் ஆனைமுத்து அவர்கள், பெரியாரின் அசைக்க முடியாத வித்து. ஆனால், அதற்கு அவரது மனைவியும் குழந்தைகளும் கொடுத்த விலை வறுமையும், சொல்லொணாத் துயரமும் தான். இவரைப் பற்றி விரிவாகச் சொல்வதற்குக் காரணம் இவருடைய உழைப்புக்கு இன்று வரை உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை. சமய உலகில், வைணவத்திற்கு ஒரு நம்மாழ்வார் என்றால், திராவிட கழக உலகில், பெரியாருக்கு அறிஞர் ஆனைமுத்து அவர்கள். ஏழை

இவர் வாழ்க்கையில் பலித்தது. சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த தந்தை பெரியாரின் சொத்துக்கள், இன்னொரு சிறுபான்மையினரைச் சென்றடைந்ததே தவிர, பெரும்பான்மையான வன்னிய சமூகத்தைச் சேர்ந்த இவருக்குக் கிஞ்சித்தும் பயன்படவில்லை. அதைப் பற்றி. இவர் கவலைப்படவும் இல்லை.

வாழப்பாடி கே. ராமமூர்த்தி அவர்கள் வன்னிய சமூகத்தின் பெருமிதம். எளிய விவசாயக் குடும்பத்தில் 18.1.1940 சேலம் மாவட்டத்தில் கூத்தப்ப படையாட்சிக்கும், பழநியம்மாள் தம்பதியினருக்கும் மகனாகப் பிறந்து 27.10.2001 வரை வாழ்ந்து பல சாதனைகள் நிகழ்த்தியவர். 1971 முதல் 1999 வரை, ஒன்பது முறை பாராளுமன்ற தேர்தல்களில் ஸ்தாபன காங்கிரஸ், இந்திரா காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு, ஏழு முறை வெற்றி பெற்று, பாராளுமன்றப் பணியையும், கட்சித் தலைமையையும் மக்கள் பாராட்டும்படி செய்து காட்டியவர். இருபதுக்கும் மேற்பட்ட தனி நபர் மசோதாக்களை நாடாளுமன்றத்தில் இவர் தாக்கல் செய்திருந்த போதிலும், அவற்றுள் வைரமாக மின்னுவது, இவர் தாக்கல் செய்த தனி நபர் மசோதாவின் செயல் வடிவமாக இன்றைக்கும் திகழ்கின்ற பஞ்சாயத்து இராஜ் சட்டம் ஆகும். பொதுத் துறை நிறுவனங்களுக்கான பாராளுமன்றக் குழுத் தலைவராகப் பணியாற்றியவர்.

1998இல் வாஜ்பாய் அமைச்சரவையில்

பெட்ரோலியத் துறையின் தனிப் பொறுப்பு அமைச்சராக இருந்தவர். இவரது காலத்தில், சமையல் வாயு இணைப்பு கேட்டு விண்ணப்பித்த சில நாட்களில், அனைவருக்கும் இணைப்பு கிடைக்கும்படி செய்தவர். இவரது காலத்தில்தான், பெட்ரோல், டீசல் விலை முதன் முறையாகக் குறைந்தது. பெட்ரோல் பங்க் உரிமையைப் பெறுவதில், இட ஒதுக்கீட்டு விகிதாச்சார அடிப்படையில், அனைத்துச் சமூகத்தினருக்கும் வழங்கும் நடைமுறையை உருவாக்கியவர். இவரால் பல வன்னியர்களும், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களும் பெட்ரோல் பங்க் உரிமையாளரானார்கள்.

இந்திராகாந்தி அம்மையார் அவர்கள், அணிசேரா நாடுகள் தத்துவத்துக்கான இந்திய பயிற்சி மையத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் பொறுப்பை இவருக்கு அளித்தார். மிழிஜிஹிசி அமைப்பின் மிகச் சிறந்த தொழிற்சங்கவாதி. INTUC அமைப்பை தேசிய வங்கிகளில் வேரூன்றச் செய்தவர் இவர். INTUC இல் உருவாக்கப்பட்ட மிழி ஸிலிதி (Indian National Rural labour Federation) அமைப்பு இந்தியா முழுவதிலும் உள்ள கிராமத் தொழிலாளர்களை ஒருங்கிணைக்க உருவாக்கப்பட்டது. இதன் அகில இந்தியத் தலைவராக இருந்தார்.

அதனை மிதிறிகிகிகீ என்கிற சர்வதேச தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்துடன் இணைத்தார். அதன் மூலம் மிலிளி இன் ஆலோசகரானார். இவர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராக இருந்தபோதுதான், காங்கிரஸ்

கட்சி 27 பாராளுமன்ற தொகுதிகளில் வெற்றி பெற்றது. இவ்வளவு விவரங்களைத் தருவதற்குக் காரணம், இவருடைய சாதனைகள் மீண்டும் மீண்டும் மக்கள் மன்றத்தில் பேசப்பட வேண்டும் என்பதுதான். இவருக்குப் பின்வந்தவர்கள் இவரைவிடவும் காபினட் அந்தஸ்து பெற்று மத்திய அரசில் புகழோடு பணியாற்றி இருக்கின்றனர். ஆனால், அவர்கள் தனது தந்தையின் தோள் மீது நின்று பதவி பெற்றவர்கள். இனத்தின் பிரதிநிதியாக அடையாளப்படுத்தப்பட்டாலும், இனத்தின் அடையாளமாக கருதப்பட முடியாதவர்கள்.

இவரைப் போல் சுயம்புவாக உருவாகி, இன உணர்வோடு செயல்பட்டு, "நான் காங்கிரஸ் கட்சிக்குத் தலைவன். ஆனால், எனக்குத் தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்கள்" என்று தைரியமாகச் சொன்னவர்கள் அபூர்வம். மறைந்த தலைவர்களில், இராமசாமிப் படையாச்சியாருக்குப் பிறகு, வன்னிய அரசியல் தலைவர்களில் இன்றும் நினைந்து போற்றப்பட வேண்டியவர்.

மக்கள் தொகை அடிப்படையில், தமிழ் நாட்டின் முதல் பெரும்பான்மைச் சமூகமாக மட்டுமல்லாமல், சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர்த்தியாகம் செய்ததிலும், சிறைக் கொடுமைகளை அனுபவித்து, தியாகம் புரிந்ததிலும், முதல் நிலைச் சமூகமாகவும், இருந்தது வன்னியர் சமூகம். வன்னிய சமூகத்தில் திறமைக்குப் பஞ்சமில்லை. தைரியத்திற்கும் பஞ்சமில்லை. உழைப்புக்குப் பஞ்சமில்லை. ஆனாலும், இந்தச் சமூகத்தின் பஞ்சம் இன்னும் தீர்ந்தபாடில்லை. அண்மையில் பொது மேடையில் சொல்லப்பட்ட புள்ளி விவரங்களின்படி, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வாழ்கின்ற பகுதிகளில்தான் அதிகமான குடிசைகள் இருக்கின்றன. தாழ்த்தப்பட்டோர் பகுதிகளில் அந்த அளவுக்குக் குடிசைகள் கிடையாது. அவை எல்லாம் பெரும்பாலும் தமிழகத்தின் வட மாவட்டங்களில் தான் உள்ளன.

அப்படி என்றால், வன்னியர்கள் அடர்ந்து வாழ்கின்ற பகுதிகள் இன்னும் சொந்தமாக ஒரு கான்கிரீட் வீடு கட்டிக் கொள்ளக்கூட இல்லாத அளவிற்கு வறுமையில் உள்ளது என்று தெரிகிறது. வறண்ட மாநிலமான இராஜஸ்தானில்





இருந்து வந்த சேட்டுகள் வளமையாக உள்ளனர். வறட்சிப் பிரதேசமான மதுரை, திருநெல்வேலி இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து வந்த மக்கள் சென்னையில் வளமையாக உள்ளனர். இதற்கு என்ன காரணம் ?

நாம் விவசாயம் செய்கிறோம். அவர்கள் வியாபாரம் செய்கின்றனர் என்று பொதுவாகச் சொல்லிவிட முடியாது. பஞ்சாப் விவசாயிகள் நம்மைப் போல் பஞ்சத்தில் இல்லையே? நம்மிடம் அரசியல் அதிகாரம் இல்லை. அரண்மனைக் கோழி முட்டை, குடியானவன் அம்மியை உடைக்கும் என்ற சொல்லாடல் அதிகாரத்தின் வலிமையைக் கூறுகிறது. பிழைக்க வந்தவர்களுக்கு இருக்கின்ற உந்துதல், பாதுகாப்பின்மையால் தோன்றும் அச்சம், அதனால், எந்த வேலை கிடைத்தாலும் செய்ய முன்வருகின்ற நிர்ப்பந்தம் நம்மிடம் இல்லை. இது

எனது ஊர். இங்கு எனக்கு வேண்டியது கிடைக்கிறது. கெத்தாக இங்கு வாழ்ந்தால் போதும் என்ற மௌடிகத்தனம் வன்னியர்களிடம் குடி கொண்டுவிட்டது. இழந்துவிட்ட வாய்ப்புகளையும், அன்றாடம் இழந்து கொண்டிருக்கின்ற வாய்ப்புகளையும் பற்றிய உணர்வே இல்லாமல் போய்விட்டது. ஜனநாயத்தில் எண்ணிக்கைதான் அரசியலை முடிவு செய்கிறது என்ற ஞானம் இல்லாமல் போய்விட்டது.

இது எனது மண். எனது பிரதிநிதி என்னவனாக இருக்க வேண்டும் என்ற பார்வை இல்லாமல் போய்விட்டது. நாம் விரும்பும் வகையில் நம்மை ஏமாற்றுகின்ற சினிமா கவர்ச்சியாலும், அதற்குச் சற்றும் குறையாத, மேடையிலே எதுகை மோனையோடு பேசப்படுகின்ற மயக்கு மொழியாலும், சிறுபான்மையினர் செய்கின்ற பிரித்தாளும் சூழ்ச்சியுமே, நமது வீழ்ச்சிக்குக் காரணம். இந்தியர்கள் முன்னேறாததற்கு நம்மை அடிமைப்படுத்திய மொகலாயர்களும், கிறித்துவ வெள்ளைக்காரர்களும்தான் காரணம் என்பதை உணராமல், நம்மை அண்டிப் பிழைக்கின்ற பார்ப்பனர்கள்தான் காரணம் என்ற பிரச்சாரத்தின் தந்திரத்தை உணராதது மற்றுமொரு முக்கிய காரணம். பிராமணர் எதிர்ப்பு என்பது, தமிழரல்லாத பிற இனத்தவர் எழுச்சிக்கு உதவியது என்பதை நாம் இன்னும் புரிந்து கொள்ளவில்லை.

"திராவிடர் என்பது தென்னிந்தியர் அவர்களிலும் பிராமணரலலாதார் அனைவருக்குமான பொதுப் பெயர் என்று சொல்லப்பட்டாலும், உண்மையில் தமிழ்நாட்டில் ஆதிக்கம் பெற்றுவிட்ட பிறமொழியினருக்கும் சுத்தத் தமிழருக்குமான பொதுப்பெயராகவே அது பயன்படுத்தப்பட்டு வந்தது. அதனாற்றான், தமிழரல்லாதார் தமிழகத்தில் எல்லாத் துறைகளிலும் தலைமை பெற முடிந்தது" (தமிழகத்தில் பிற மொழியினார் (புத்தகம்) ம.பொ.சிவஞானம்").

நமக்கு மற்ற சமூகங்கள் உதவாது என்பதை 10.5 சதவிகித இட ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு எழுந்த எதிர்ப்பில் நாம் தற்போது புரிந்து கொண்டோம். ஆனால், இதை தொலைநோக்கோடு, 114 ஆண்டுகளுக்கு முன்பே, தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த வை. அப்பாசாமி நாயகர் என்ற வன்னியர் அப்பொழுது வெளியான "அக்கினி குல ஆதித்தன்" என்ற இதழில் ஜாதிப் பற்று குறித்து எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"ஜனத்தொகையில் மிகுதியாய்யுள்ள ஒரு ஜாதியார் முன்னுக்கு வரின் தேசத்திலோர் பாகம் முன்னுக்கு வந்தது போலல்லவா? எத்தனை பொது ஸ்தாபனங்கள் ஏற்பட்டாலும் அல்லது இந்தியாவுக்கே சுய ஆட்சி கிடைத்துவிட்டாலும், அக்காலத்தில் கூட, வன்னியரை முன்னுக்குக் கொண்டுவர அன்னியர் நினையார்."

இந்நிலை நீங்கிட என்ன வழி? அம்பேத்கார் ஒருமுறை கூறினார். தாழ்த்தப்பட்டவர்களுக்கு மகாத்மாக்கள் தேவையில்லை. அவர்களுக்கு உரிமையளிக்கின்ற சட்டங்கள்தான் தேவை என்று. தலைவர்கள் தேவைதான். ஆனால், ஒரு தனி மனிதனை நம்பியிருப்பது எவ்வளவு ஆபத்தானது என்பதை வன்னிய சமூகம் உணர வேண்டிய தருணம் இது. இதுவரை சமூகத்தால் தலைவர்கள் நன்மையடைந்திருக்கிறார்கள். தலைவர்களால் சமூகம் நன்மையடைய என்ன வழி? தமிழ்த் தேசியம் பேசியது போதும். வடதமிழ்நாடு மற்றும் வன்னியத் தேசியம் என்று பேச ஆரம்பித்தால் என்ன?

**ஜி.சந்தானம்** , ஐ.ஏ.எஸ் (ஓய்வு)


DNC Groups
அனைவருக்கும் புத்தாண்டு
பொங்கல் நல்வாழ்த்துகள்
SINCE 1979
WINNER FOR
"MOST TRENDY SILK SAREE"
TIMES BUSINESS AWARDS
Sri Mahalakshmi Silk
#14/49, D.N.C. CHIT FUNDS BUILDING, NORTH BOAG ROAD,
T.NAGAR CHENNAI - 17 ( Behind T.Nagar AGS Theatre )
044 42133044
CAR PARKING AVAILABLE
CHIT SCHEME AVAILABLE

# சென்னை நகரம் சீர்கெட்டதால் பேர் கெட்டதா? பேர் கெட்டதால் சீர் கெட்டதா?

**சென்னை மாநகரம் சிங்கார சென்னை, என்ற பெயர் பெற்றது. அழகிய கடற்கரை கரையேற துடிக்கும் அலைகள், அலைகளின் ஓசையை கேட்க கடற்கரையில் கூடிடும் பொதுமக்கள் இளைஞர்கள் முதல் இளம் காதலர்கள் வரை கூடி பொ–முதை போக்கும், வாசஸ்தலமாக கடற்கரை மணலில் கூட பொழுதை கழிக்கும் மணல் மேடுகள், கடற் கரை சாலையை அழகுப்படுத்தும் மின்சார விளக்குகள், இதற்கு பெயர் கிழக்கு கடற்கரை சாலை என்பதாகும்.**

அருகிலேயே கூவம் நதி நறுமணத்தை வீசிக் கொண்டிருக்கும். விமானம் நிலையம், அரசு பொது மருத்துவமனை, எழும்பூர் ரயில் நிலையம், சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம், கன்னிமாரா நூலகம், தாஜ் கன்னிமாரா ஹோட்டல், கௌரன் பேலஸ் ஹோட்டல் (அடையார் பார்க்), போட் கிளப், ராஜா அண்ணாமலைபுரம் செட்டிநாடு பேலஸ், அடையார் ஹவுஸ், ஆங்கிலேயர்களின் அடையாளத்தை பறைசாற்றிய சிம்சன் கம்பெனி, கலாசேத்திரா, பெசன்ட்நகர் ஹலியட் பீச், சென்ட்தாமஸ் மௌவுண்ட் பேராலயம், பிராட்வே துறைமுகம், செயின்ட் ஜார்ஜ்கோட்டை (தலைமைச் செயலகம்), சென்னை மாநகராட்சி (ரிப்பன் மாளிகை), சென்னை பல்கலைக்கழகம், போன்றவை சென்னை மாநகரின் அடையாளத்தை பிரதிபலிக்கும் முகங்களாக இன்றைக்கும் காட்சியளிக்கின்றன.

இவைகள் உள்ளடக்கிய நகரம் தான் சிங்கார சென்னை என்று பெயர் பெற்று விளங்கியது. ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு சென்று பிறகு நாடு விடுதலை பெற்று முதன் முதலில் நடைபெற்ற பொதுத் தேர்தல் 1952 ஆம் ஆண்டு நடைபெற்றது. இந்த தேர்தல் முடிவுக்குப் பிறகு தமிழ்நாட்டில் முதலமைச்சர்களாக பதவி வகித்தவர்கள், மூதறிஞர் ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், பக்தவச்சலம், பேரறிஞர் அண்ணா, மூத்தமிழ் அறிஞர் கலைஞர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ராமச்சந்திரன், திருமதி ஜானகி அம்மாள், புரட்சி தலைவி செல்வி ஜெயலலிதா, ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி, இவர்களெல்லாம் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்து தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாவட்டத்தின் வளர்ச்சிக்கு பல்வேறு நலத்திட்டங்களை தயாரித்து மாநகரை மெருகுகூட்டியவர்கள், மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை மாநகரின் மேயராக பதவி வகித்த காலகட்டத்தில் சிங்கார சென்னை என்ற பெயர் உருவானது.

இப்படிப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க புகழ்மிக்க சென்னை மாநகரம், சீர்கேட்டது எதனால், என்பதை ஊற்றுநோக்கி பார்க்கும் பொழுது நகரத்தின் பெயர் கேட்டதால் மாநகரம் சீர் கெட்டதா? அல்லது நகரம் சீர்கேட்டதால் மாநகரின் பெயர் கேட்டதா? என்ற கேள்வி எழுகிறது. குறிப்பாக நகரின் பல பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்பின்



ஆக்கிரமிப்புகளும் நீர் பிடிப்பு, இடங்களெல்லாம் கட்டிடங்களாக மாறியது, ஏறி குளங்கள் எல்லாம் மாடி வீடுகளாக உருவெடுத்தது, மழை நீர் வடிகால் தடங்கல் எல்லாம் ஆக்கிரமிப்புக்கு உள்ளானதால், கனமழைக்கு தாக்குப்பிடிக்க முடியாமல், வீதியெங்கும் தண்ணீர், வீட்டுக்குள்ளும் தண்ணீர், தனது ஆதிக்கத்தை செலுத்திக் கொண்டிருக்கிறது.



இத்தகைய சூழலில் இருந்து மக்களையும், வீடுகளையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் உரிய முறையில், நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது பொதுமக்களின் விருப்பமாக உள்ளது. ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறாததை பார்க்கும் பொழுது ஒவ்வொரு மனிதனின் மனநிலையும் ஆட்சியாளருக்கு எதிரான ஒரு நிலையை எடுக்க வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு மக்கள் தள்ளப்படுகிறார்கள். ஆட்சி எதுவாக இருந்தாலும், எந்த கட்சி ஆட்சியாக இருந்தாலும் ஆயிரக்கணக்கான கோடிக் கணக்கில் திட்டங்கள் தயாரித்து மழை நீர் வடிகால் கால்வாய்களை செப்பனிட்டாலும், ஆண்டுதோறும் சாலைகளை பராமரிப்பது போல் மழை நீர் வடிகால் கால்வாய்களையும், சிறந்த முறையில் பராமரித்து பராமத்து பணிகளை செவ்வனே செய்தால் மட்டும் சிங்கார சென்னையின் பெயர் கேடாமல் இருந்திருக்கும். அல்லது மழை நீரின் பாதிப்புகளிலிருந்து குறைந்தபட்சம் மக்களை பாதுகாப்பதோடு வீடுகளில் தண்ணீர் புகாமல் பார்த்துக் கொள்ள முடியும். இயற்கை சீற்றம் என்பது எதிர்பார்த்து வருவதல்ல. இருந்தாலும் சில குறிப்பிட்ட காலங்களில் மழை வருவதற்கான மாதங்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியும். நவீன காலத்தில் விஞ்ஞான வளர்ச்சியில் மழை எப்போது பெய்யும், எத்தனை நாட்கள் நீடிக்கும், புயல் எப்பொழுது கரையை கடக்கும் என்பது போன்ற நிகழ்வுகளை மிக துல்லியமாக வானிலை ஆராய்ச்சி மையம் கணித்து கூறக் கூடிய அளவிற்கு நாடு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

இதனை அறிந்து அரசாங்கம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருமுன் காப்போம் என்ற திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து பெருமழை வெள்ளத்தில் இருந்து பொதுமக்களையும், பொதுமக்கள் உடமைகளையும், ஏழை எளிய மக்களின் குடிசைகளையும், அடுக்குமாடி குடியிருப்புகளையும் பத்திரமாக நம்மாள் பாதுகாத்து இருக்க முடியும்., சந்தர்ப்பமும், சூழ்நிலையும்இயற்கைசீற்றமும்,பெருமழையும், புயலும், நகரத்து மக்களை அச்சுறுத்தும் பொழுது சில நேரம் ஆட்சியாளர்களின் அலட்சியமும் காலதாமதமும் கூட நகரத்தின் பெயர் கெடுவதற்கும் வழிவகுத்து விடும்.

பொதுமக்கள் ஆகிய நாம் எவ்வளவு கவனமுடன் இருந்து செயல்பட்டாலும் அரசாங்கத்தின் பாதுகாப்பும், அரசின் திட்டங்களும் மட்டுமே பொதுமக்களையும், அவர்களது உடமைகளையும் பாதுகாக்க முடியும். வருவாய் துறை அதிகாரிகள் உள்ளாட்சித் துறை நிர்வாகம், காவல்துறையின் செயல்கள், இவை மூன்றும் இணைந்து முதலமைச்சரின் நேரடி மேற்பார்வையில் துரிதமாக செயல்பட்டு இருந்தால் தற்பொழுது ஏற்பட்டுள்ள மழையின், வெள்ளத்தின் பாதிப்பில் இருந்து மக்களை பசி, பட்டினியில் இருந்து பாதுகாத்து இருக்க முடியும். இந்த குறைபாடுகளினால் மின்சார தடை கட்டாயமாக நிறுத்தப்பட்டது. மழை விட்டப் பிறகும், இரண்டு மூன்று நாட்களாக மழை நீர் வடியாமல் மக்கள் அவதிக்குள்ளானதும், அரசு இயந்திரம் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டிருந்தும் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட இடங்களில் நிவாரணங்கள் வழங்குவதற்கு மக்களை தேடிச் சென்று ஆறுதல் கூறினாலும், மக்களின் விருப்பம் முழுமையாக நிறைவேற்றப்படாதாலும் அரசே காரணம் என்று மக்கள் கூறை கூறுவதை எந்த அரசாக இருந்தாலும் ஏற்றுக் கொண்டு தாங்கிக் கொள்ளதான் வேண்டும்.

இந்த இடர்பாடுகளில் இருந்து மீள்வது மக்களாக இருந்தாலும் அடுத்த இயற்கை சீற்றத்திற்கு சென்னை மாநகரம் ஆட்கொள்ளாமல் பாத்துக் கொள்ள வேண்டிய கடமையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் உள்ளது.

**– பெரியார்நகர், பாஸ்கர் ஸ்**

# Queen of Sugarcane

**புலவர் விளம்பி நாகனார் எழுதிய நான்மணிக்கடிகையில் கரும்பு பயிர் நிலத்துக்கு அழகு என்று 9வது பாடலில் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்.**

நிலத்துக்கு அணி என்ப நெல்லும் கரும்பும்

குளத்துக்கு அணி என்ப தாமரை

பெண்மை நலத்துக்கு அணி என்ப நாணம்

தனக்கு அணி தான் செல் உலகத்து அறம்.

கரும்பில் மகசூல் கூட்டவும், இனிப்பின் அளவை பெருக்கவும் கரும்பிலே பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டது. அப் போது கரும்பு விஞ்ஞானிகள் சி.ஏ.பார்பர் மற்றும் டி.எஸ்.வெங்கட்ராமன் இருவரும் பல ஆராய்ச்சிகள் செய்து முதல் வீறிய ஒட்டுரகமான Co 205 என்ற கரும்பு ரகத்தை உருவாக்கினார்கள். கோவையில் உள்ள கரும்பு இனப்பெருக்க நிலையத்தில், இந்த பணியில் விஞ்ஞானிகள் பார்பர், வெங்கட்ராமன் இவர்களுடன் இணைந்து கரும்பு ஆராய்ச்சியில் ஈடுபட்டார். கேரளத்தை சேர்ந்த விஞ்ஞானி எடவலேத் கக்கத் ஜானகி அம்மாள், சிறந்த தாவரவியல் விஞ்ஞானி, உயிர்கல மரபியல் (Cytogenetics) தொகுதி புவியியல் (Phytogeography) துறைகளில் முன்னோடியாவர்.

ஜானகி கேரளத்தில் தலக்கோயில் 1897 நவம்பர் 4-ல் பிறந்தார். அவரது தந்தை எட்வலேத்கக்கத் கிருஷ்ணன் சென்னை மாகாணத்தில் நீதித்துறை நடுவராகப் பணி புரிந்தார். தாழ்த்தப்பட்ட தீயா சமூகத்தில் ஆறு சகோதரர்களுடனும் ஐந்து சகோதரிகளுடனும் பிறந்த ஜானகிக்கு படிப்பில் அதீத ஆர்வமும் இருந்தது. அவரது குடும்பமும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தது. இளமையிலேயே தாவரவியலில் ஈடுபாடு கொண்ட ஜானகி தலைச்சேரியில் பள்ளி படிப்பை முடித்து சென்னை ராணிமேரி கல்லூரியில் இளங்கலை பட்டமும், சென்னை மாநில கல்லூரியில் தாவரவியலில் ஹானர்ஸ் பட்டமும் பெற்றார். அங்கு பயின்றபோது தாவர உயிர் கல மரபியலில் ஆர்வம் கொண்டார். படிப்பை முடித்தவுடன் கிறிஸ்து கல்லூரியில் கல்வி கற்பித்தார். இடையே அமெரிக்காவின் மிக்ஸிகன் பல்கலை கழகத்திற்கு சென்று பயின்று அங்கு முதுநிலை பட்டம் பெற்றார். 1925ல் நாடு திரும்பி கல்வி பணியைத் தொடர்ந்தார். பிறகு கிழக்கு நாடுகளுக்கான பார்பர் நினைவு உதவித் தொகையை முதலாவதாகப் பெற்ற அவர் மீண்டும் மிக்ஸிகன் பல்கலைக்கழகம் சென்று ஆராய்ச்சி படிப்பில் சேர்ந்து 1931-ல் டி.எஸ்.ஸி (ஞி.ஷிநீ) பட்டம் பெற்றார். வெளிநாடு சென்று ஆய்வில் முனைவர் பட்டம் பெற்ற முதல்



இந்திய பெண்மணி இவர் தான். அதன்பின் நாடு திரும்பிய ஜானகி 1932 முதல் 1934 வரை திரவனந்தபுரத்தில் உள்ள மஹாராஜா அறிவியல் கல்லூரியில் தாவரவியல் பேராசிரியராக பணியாற்றினார். பிறகு கோவையில் உள்ள கரும்பு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையத்தின் மரபியலாளராக விஞ்ஞானி பார்பருடன் இணைந்து பணியாற்றினார்.

அப்போது சக்காரம் ஸ்பான்டேனியம் என்ற (Saccharum Spontanum) காட்டின கரும்பு ரகத்தின் மரபியலை அவர் ஆராய்ந்தார். அதன் விளைவாக அங்கு பல உள்நாட்டு கலப்பு மரபின கரும்பு ரகங்களை உருவாக்கினார். ஆயினும் அங்கு ஜாதி ரீதியான பாகுபாடுகளால் பாதிக்கப்பட்ட ஜானகி அங்கிருந்து வெளியேறினார்.

பிறகு லண்டன் பிரிட்டன் நாடுகள் சென்று பணிபுரிந்தார். பிறகு இந்திய நாட்டின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் அழைப்பை ஏற்று 1951-ல் நாடு திரும்பிய ஜானகி Botanical Survey of IndiaM¡ சிறப்பு அலுவலராக 192-ல் பொறுப்பேற்றார். பிறகு அலகாபாத் ஜம்மு போன்ற பல இடங்களில் சிறப் பாக பணியாற்றி, இறுதியாக 1970-ல் சென்னை திரும்பிய அவர் சென்னை பல்கலை கழகத்தின் தாவரவியல் உயராய்வு மையத்தின் மதிப்புறு விஞ்ஞானியாக செயல்பட்டார். அப்போது சென்னை மதுரவாயலில் உள்ள மத்திய கள ஆய்வகத்தில் 1984 வரை பணியாற்றினார். இந்திய அறிவியல் அகாதெமி 1935 மற்றும் 1957-ல் உறுப்பினராக ஜானகி அம்மாள் இருந்தார். அவருக்கு 1977-ல் இந்திய அரசின் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

சாகுபடி பயிரினங்களின் குரோமசோம் வரை படங்கள் என்ற நூல் விஞ்ஞானி சி.டி.டார்லிங்கனுடன் இணைந்து (1945) எழுதி வெளியிட்டார் ஜானகி. மேலும் தாவரங்களும் மனிதர்களும் (1974) என்ற நூலையும் அவர் எழுதியுள்ளார்.



ஓய்வு காலத்தில் மூலிகைத் தாவரங்கள் குறித்து ஆய்வுகளிலும் (ETHNO BOTANY) அவர் ஈடுபட்டார். கேரள மழைக்காடுகளில் உள்ள அரிய மூலிகைகளை சேகரித்து முறைப்படி பட்டியலிட்டார். திருமணம் செய்து கொள்ளாமலே வாழ்நாள் முழுவதும் தாவரவியல் ஆராய்ச்சிக்கே செலவிட்ட ஜானகி அம்மாள் 1984, பிப்ரவரி 7-ல் மறைந்தார். இவருக்கு மீண்டும் 1999-ல் தேசிய விருது வழங்கப்பட்டது. இவர் ஆற்றிய சிறந்த சேவையை கருதி கரும்பிலே கட்டுண்ட பலரும் இவரை Queen of Sugarcane என்று அழைக்கின்றனர்.






**அக்ரி. ஆர்.வேணுகோபால்**
தலைவர்
ராகா சென்னை யூனிட்
செல்: 7338724463


BEST FOOD FOR HUMAN CONSUMPTION

# 2023ஆம் ஆண்டின் முக்கிய உலக நிகழ்வுகள்: ஒரு பார்வை

**2023ஆம் ஆண்டு இன்னும் சில தினங்களில் முடிய உள்ளது. இந்நிலையில், இந்த ஆண்டு நடந்த மிக முக்கிய உலக நிகழ்வுகளை நினைவு கூருவது அவசியம்.**



பாலத்தீன போர், துருக்கி நிலநடுக்கம், டைட்டன் நீர்மூழ்கி கப்பல் விபத்து என்று உலக அளவில் பல முக்கிய நிகழ்வுகள் இந்த ஆண்டு நடந்திருக்கிறது.

அந்த நிகழ்வுகளை நினைவுகூரும் வகையில் 2023ஆம் ஆண்டின் முக்கிய உலக நிகழ்வுகள் தொகுப்பை இப்போது பார்க்கலாம்.

## இங்கிலாந்து மன்னர் 3ம் சார்லஸ் முடிசூட்டு விழா

கடந்த மே 6 ஆம் தேதி இங்கிலாந்து வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் நடந்த முடிசூட்டு விழாவில் மூன்றாம் சார்லஸ் மன்னருக்கு முடிசூட்டப்பட்டது.

பிரிட்டனின் முன்னாள் ராணியான இரண்டாம் எலிசபெத்தின் மரணத்தை அடுத்து, அவரது மகன் அரியணை ஏறினார்.

இதனையடுத்து, கடந்த மே மாதம் முழுவதும் லண்டன் மாநகரமே



கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்தது. அந்த விழாவிற்கு, உலகின் பல முக்கிய பிரபலங்கள் வருகை தந்திருந்தனர்.

குறிப்பாக, இந்தியா உட்பட இங்கிலாந்து பேரரசின் கீழ் இருந்த அனைத்து நாடுகளும் இந்த விழாவில் கலந்துகொண்டன.

## துருக்கி சிரியா நிலநடுக்கம்

கடந்த பிப்ரவரி 6ஆம் தேதி, துருக்கி, சிரியா ஆகிய நாடுகளுக்கு இடையேயான எல்லைக்கு அருகே தென்கிழக்கு துருக்கியில் மையம் கொண்டிருந்த 7.8 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.

1939ஆம் ஆண்டுக்கு பிறகு துருக்கியில் ஏற்பட்ட மிகப்பெரும் நிலநடுக்கம் இதுவாகும்.

துருக்கி ஒரு மிகபெரும் பூகம்ப மண்டலத்தில் அமைந்திருப்பதால் அங்கு இப்படிப்பட்ட நில அதிர்வுகள் ஏற்படுவது புதிதல்ல.

ஆனால், அந்த ஒரு நிலநடுக்கத்தோடு முடிந்து விடும் என்று நினைத்திருந்த நிலையில், அடுத்து வந்த 3 மாதங்களுக்குள் 30,000க்கும் மேற்பட்ட சிறிய நிலநடுக்கங்கள் அந்நாட்டில் பதிவாகியது.

இந்த வருடம் துருக்கியில் ஏற்பட்ட மிகப்பெரும் நிலநடுக்கத்தால், துருக்கியில் 50,783 பேரும், சிரியாவில் 8,476 பேரும் உயிரிழந்தனர். உறுதிப்படுத்தப்பட்ட மொத்த இறப்பு எண்ணிக்கை 59,259 ஆகும்.



## டைட்டன் நீர்மூழ்கிக் கப்பல் கடலுக்கு அடியில் நசுங்கிய சம்பவம்

அமெரிக்காவில், 100 ஆண்டுகளுக்கு முன் கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலின் இடிபாடுகளைக் காணச் சென்ற டைட்டன் நீர்மூழ்கி கப்பல் நொறுங்கி, அதில் பயணம் செய்து ஐந்து கோடீஸ்வரர்கள் கடந்த ஜூன் 18ஆம் தேதி உயிரிழந்தனர்.

பொதுவாக, நீர்மூழ்கிக் கப்பல்களை யெல்லாம், ஸ்டீல், டைட்டானியம் மற்றும் அலுமினியம் உள்ளிட்ட கடினமான உலோகங்களைக் கொண்டு உருவாக்குவார்கள்.

ஆனால், இந்த டைட்டன் நீர்மூழ்கியை, பரிச்சார்த்த முயற்சியாக கார்பன் ஃபைபரைக் கொண்டு உருவாக்கியிருக்கிறார்கள்.

அது பயணம் செய்த ஆழத்தில், ஒரு சதுர அங்குலத்திற்கு 2,500 கிலோ அழுத்தத்தைத் தாங்க வேண்டியிருந்திருக்கும்.

ஆனால், அவ்வளவு அழுத்தத்தைத் தாங்க முடியாமல் டைட்டன் நீர்மூழ்கியானது, கடலுக்கு அடியில் உள்நோக்கி வெடித்து(மினீ ஜீறீஷீபீமீ) நசுங்கியது.



## சிங்கப்பூர் அதிபர் தேர்தலில் தமிழ் வம்சாவளி தர்மன் சண்முகரத்னம் வெற்றி

சிங்கப்பூர் அதிபர் தேர்தலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பொருளாதார நிபுணர் தர்மன் சண்முகரத்தினம் வெற்றி பெற்று, கடந்த செப்டம்பர் 14ஆம் தேதி 9வது சிங்கப்பூர் அதிபராக பதவியேற்றார்.

சீன வம்சாவளியைச் சேர்ந்த இரண்டு போட்டியாளர்களை தோற்கடித்து, தர்மன் சண்முகரத்தினம் வெற்றி வாகை சூடினார்.




இந்த ஆண்டு நடந்த அதிபர் தேர்தலில் தர்மன் சண்முகரத்தினம் 70.4 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்த நிலையில், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட மற்ற போட்டியாளர்களான எங் கோக் சாங் மற்றும் டான் கின் லியான் ஆகியோர் 15.7 சதவீதம் மற்றும் 13.88 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தனர்.

தர்மன் சண்முகரத்தினம், இந்திய மற்றும் இலங்கைத் தமிழ் வம்சாவளியை சேர்ந்தவர் ஆவார். இவரது மூதாதையர்கள் 19ஆம் நூற்றாண்டிலிருந்தே சிங்கப்பூரில் வசித்து வருகின்றனர்.

## இந்தியாகனடாவுக்கு இடையே ஏற்பட்ட பெரும் பிளவு

கடந்த ஜூன் மாதம் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் வைத்து, காலிஸ்தான் பயங்கரவாதியான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டார்.

அவரது கொலையில் இந்திய அரசாங்கத்திற்கு நேரடி தொடர்பு இருப்பதாக



கனட அரசாங்கம் பெரும் குற்றசாட்டை முன்வைத்தது.

காலிஸ்தான் பயங்கரவாதியான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதில் இந்திய அதிகாரிகளுக்கு நேரடி தொடர்பு இருப்பதை உறுதி செய்யும் "நம்பகமான குற்றச்சாட்டுகள்" இருப்பதாக கனட நாடாளுமன்ற அமர்வின் போது பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார் .

ஆனால், இதுவரை கனடா சரியான ஆதாரங்களை கொடுக்கவில்லை என்று இந்தியா கூறி வருகிறது.

இந்த பிரச்சனையில், இந்தியாவில் இருந்த கனட தூதுரக அதிகாரிகள் அனைவரும் வெற்றியேற்றப்பட்டனர்.

இந்த விவகாரம் இன்னும் சூடு குறையாமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேல் - பாலஸ்தீனப் போர்

கடந்த அக்டோபர் 7ஆம் தேதி பாலஸ்தீனத்தை சேர்ந்த ஹமாஸ் பயங்கரவாதக் குழு இஸ்ரேல் மீது திடீர் வான் வழி தாக்குதலை நடத்தியது. அப்போது 5000க்கும் மேற்பட்ட ராக்கெட்டுகள் இஸ்ரேல் மீது ஏவப்பட்டன.

ஹமாஸ் குழு இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலில் 1400 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். 200க்கும் மேற்பட்டோர் பிணய கைதிகளாக பிடித்து செல்லப்பட்டனர்.

இதனை தொடர்ந்து, இரண்டு மாதமாக ஹமாஸ் குழுவை அழிப்பதற்காக காசா பகுதி மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த தாக்குதலில் இதுவரை 17,000க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர்.

நடுவில் சில நாட்கள் போர் இடைநிறுத்தம் செய்யப்பட்ட போது சில பிணய கைதிகளை ஹமாஸ் விடுவித்தது. ஆனால், அதற்குபின் "ஒப்பந்தங்கள் மீறப்பட்டதால்" மீண்டும் போரை தொடங்குவதாக இஸ்ரேல் அறிவித்தது.

## இலங்கை பொருளாதார வீழ்ச்சி: ராஜபக்சே நாடு தப்பியது

இலங்கைப் பொருளாதார நெருக்கடி என்பது 2019இல் தொடங்கி இப்போது வரை தொடர்ந்து வரும் நெருக்கடியாகும்.

2022ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இலங்கையின் பணவீக்க விகிதம் ஆண்டுக்கு 50% ஆக உயர்ந்தது.



பெட்ரோல் மற்றும் டீசல் தட்டுப்பாடு காரணமாக, எரிபொருள் விற்பனை கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம், பொருட்களைப் பாதுகாக்க பள்ளிகள் கூட மூடப்பட்டன.

தேவையான பொருட்களை வெளிநாடுகளில் இருந்து கொள்முதல் செய்ய முடியாத நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த பொருளாதார நெருக்கடியால்பெரிய எதிர்ப்புகளை எதிர்கொண்ட அதிபர் கோத்தபய ராஜபக்ஷ கடந்த ஆண்டு ஜூன் மாதம் பதவி விலகி, நாடு தப்பினார்.

எனினும், இப்போது வரை இலங்கை, சீனாவுக்கு சுமார் 7 பில்லியன் டாலர்களும் இந்தியாவுக்கு சுமார் 1 பில்லியன் டாலர்களும் கடன்பட்டுள்ளது.

# பழகுவதற்கு இனிய நண்பர்...!

விஜயகாந்த்!
நடிகர் என்ற பந்தா இல்லாதவர்!
பழகுவதற்கு இனிய நண்பர்!
தமிழ் மொழி மீதும்,
தமிழ் மக்கள் மீதும்
அதிக பற்று கொண்டவர்!
தமிழுக்காக எந்த தியாகத்திற்கும்
தயாராக இருந்தவர்!
கலைஞர் மீது மிகுந்த
மரியாதை கொண்டவர்!
அவருடைய மறைவு என்பது
ஜாதி, மதம், மொழி கடந்து,
ஏன் நாடு கடந்தும் கூட
பெரிய பாதிப்பை
ஏற்படுத்தி இருக்கிறது!
அவரை இழந்து வாடும்
அவருடைய குடும்பத்தினருக்கும்,
தொண்டர்களுக்கும்,
திரையுலக நண்பர்களுக்கும்
என்னுடைய இரங்கலை
தெரிவித்துக் கொள்கிறேன்.
அவருக்கு எனது அஞ்சலி....





அமைச்சர் **துரைமுருகன்**
கழகப் பொதுச்செயலாளர்
திராவிட முன்னேற்றக் கழகம்



# விஜயகாந்த் மரணம்: அரசியலில் நல்ல தலைவர், பழகுவதில் நல்ல நண்பர்

மறைந்த விஜயகாந்த் மதுரை மாவட்டத்தை சேர்ந்தவர். பன்முகத்தன்மை கொண்டவர் விஜயகாந்த். இயற்பெயர் விஜயராஜ் சினிமா பெயர் விஜயகாந்த், பிறப்பு 25-ஆகஸ்ட்-1952, பிறந்த இடம் திருமங்கலம் -மதுரை, மனைவி பிரேமலதா, குழந்தைகள் விஜய் பிரபாகரன் - சண்முக பாண்டியன், பெற்றோர் அழகர்சாமி நாயுடு - ஆண் டாள், புனைப்பெயர் கேப்டன் - புரட்சி கலைஞர் விஜயகாந்த்.



தனது ஆரம்ப கால பள்ளிப் படிப்பை தேவகோட்டையிலுள்ள தி பிரிட்டோ உயர்நிலை பள்ளியிலும், மதுரையில் உள்ள நாடார் உயர்நிலை பள்ளியிலும் பயின்றார். பத்தாம் வகுப்பு வரை படித்த விஜயகாந்த் அதன்பின் தனது தந்தையின் அரிசி ஆலையின் நிர்வாகத்தை கவனிக்க ஆரம்பித்தார்.

படிக்கும் பருவத்திலேயே இவருக்கு சினிமா மீது ஈர்ப்பு இருந்ததால் சினிமாவில் சேர்ந்து நடிக்க வாய்ப்பு தேடி சென்னை வந்தஇவருக்கு 1978ல் இயக்குநர் காஜாவின் இயக்கத்தில் வெளிவந்த 'இனிக்கும் இளமை' என்ற திரைப்படத்தில் ஒரு சிறு கதாபாத்திரம் ஏற்று நடித்து தனது திரைப்பயணத்தை துவக்கினார்.

அதன்பின் 1980ல் வெளிவந்த 'தூரத்து இடிமுழக்கம்' என்ற திரைப்படத்தில் முக்கிய வேடமேற்று நடித்து ஒரு நிலையான இடத்தை தமிழ் சினிமாவில் பிடிக்க முற்பட்டார். 1981ல் இயக்குநர் எஸ் ஏ சந்திரசேகர் இயக்கத்தில் இவர் நாயகனாக நடித்து வெளிவந்த சட்டம் ஒரு இருட்டறை' என்ற திரைப்படம் ஒரு மிகப்பெரிய வெற்றி படமாக அமைந்தது. விஜயகாந்தின் திரைப்பயணத்தில் ஒரு மிகப்பெரிய திருப்பத்தையும் தந்தது.

இதன் பிறகு தன்னை ஒரு ஆக்ஷன் ஹீரோவாக காண்பிக்க நினைத்து அதற்கேற்ற கதாபாத்திரங்களை தேர்ந்தெடுத்து நடித்து பல வெற்றிப்படங்களை தந்தார் விஜயகாந்த். தன்னால் குணசித்திர வேடமேற்று நடித்தும் வெற்றி பெற முடியும் என்று நிரூபித்த படம் இயக்குநர் ஆர் சுந்தர்ராஜன் இயக்கத்தில் 1984 ஆம் ஆண்டு வெளிவந்த 'வைதேகி காத்திருந்தாள்' என்ற திரைப்படமாகும். இத்திரைப்படம் மிகப்பெரிய வெற்றி பெற இதனைத் தொடர்ந்து 'அம்மன் கோயில் கிழக்காலே' 'தழுவாத கைகள்' 'ஊமை விழிகள்' என்று பேர் சொல்லும்படி இவருடைய படப்பட்டியல் நீண்டது.

1991ல் இயக்குநர் ஆர்கே செல்வமணியின் இயக்கத்தில் வெளிவந்து மிகப் பெரிய வெற்றி பெற்ற திரைப்படம் 'கேப்டன் பிரபாகரன்'. இத்திரைப்படம் விஜயகாந்திற்கு 100வது திரைப்படம் என்ற அந்தஸ்தோடு வந்தது மட்டுமல்லாமல் இத்திரைப்படத்திற்கு பின்னர் தான் இவரை இவருடைய ரசிகர்களும் இவருடைய கட்சித் தொண்டர்களும் அன்போடும் மரியாதையோடும் 'கேப்டன்' என்று அழைக்க ஆரம்பித்தனர்.

விஜயகாந்த் இதுவரை தமிழ் படங்களில் மட்டுமே நடித்துள்ளார். இவரது திரைப்படங்கள் ஹிந்தி மற்றும் தெலுங்கு மொழிகளில் டப்பிங் செய்யப்பட்டிருந்தாலும் இவர் தமிழ் சினிமாவில் தமிழ் படங்களில் மட்டுமே நடித்துள்ள குறிப்பிடப்படும் பிரபலங்களில் இவரும் ஒருவராவார். இவருக்கு தமிழ் சினிமாவில் "புரட்சி கலைஞர்' என்ற பட்டம் உண்டு.

இவரது படங்களில் தேசப்பற்று வசனங்கள் மிகவும் அழுத்தமாக இருக்கும். ஊழல், திருட்டு என சட்ட விரோத செயல்களுக்கு இவரின் குரல் திரைப்படங்களிலும், சமூகத்திலும் தொடர்ச்சியாக ஒலிக்கும்.

விஜயகாந்த் நடிக்கும் படங்கள் பெரும்பாலும் ஊழலுக்கு எதிரானதாகவும், தேசப்பற்று மிக்க படங்களாக இருக்கும். பெரும்பாலும், இரட்டை வேடம், போலீஸ் மற்றும் ராணுவ வீரர் போன்ற வேடங்களில் நடித்துள்ளார்.

விஜயகாந்த் நடிகனாக மட்டுமில்லாமல், தமிழ் திரைப்பட சங்க தலைவராகவும் இருந்துள்ளார். அவர், தலைவராக இருந்த போது, பல கோடி கடன் அடைக்கப்பட்டு முன்னணி சங்கமாக உயர்த்தினார்.

சுமார் 35 வருடங்கள் திரைத்துறையில் ஆதிக்கம் செலுத்திய இவர் 2005ம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் தேதி மதுரையில் 'தேசிய முற்போக்கு திராவிட கழகம்' என்ற பெயரில் கட்சி ஒன்றை ஆரம்பித்து தனது அரசியல் பயணத்தையும் துவக்கினார்.

2006ல் நடந்த தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் இவருடைய கட்சி 234 தொகுதிகளிலும் போட்டியிட்டு அனேக இடங்களில் கணிசமான வாக்குகளைப் பெற்று திமுக மற்றும் அதிமுகவிற்கு அடுத்த தனிப்பெரும் கட்சியாக உருவானது. இவர் சந்தித்த முதல் தேர்தலில் தனது முதல் களமாக விருத்தாசலம் தொகுதியில் போட்டியிட்டு தன்னை எதிர்த்து போட்டியிட்ட வேட்பாளரைவிட சுமார் 13000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி வாகை சூடி எம்எல்ஏ.,வாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர் 2011ல் நடந்த சட்டசபை தேர்தலில்



இவருடைய கட்சி அதிமுகவுடன் கூட்டணி வைத்து 49 தொகுதிகளில் போட்டியிட்டு 29 தொகுதிகளில் வென்று, திமுகவை பின்னுக்கு தள்ளி பிரதான எதிர்கட்சியாக உருவெடுத்தது. அதற்கு பின்பு சில நாட்களிலேயே கருத்து வேறுபாடு காரணமாக அதிமுகவுடன் இருந்த கூட்டணியை முறித்துக் கொண்டு பிரதான எதிர்கட்சி தலைவராக செயல்பட்டு வந்தார்.

விஜயகாந்த் 1979 ஆம் ஆண்டு 'அகல் விளக்கு' திரைப்படத்தின் மூலம் நடிகராக தமிழ் சினிமாவில் அறிமுகமாகி 2015 ஆம் ஆண்டு வரை 150க்கும் மேற்பட்ட தமிழ் திரைப்படங்களில் நடித்துள்ளார்.

இவரது நடிப்பையும், நாட்டு பற்றையும் பாராட்டி தமிழக அரசு விஜயகாந்த்திற்கு கலைமாமணி விருது (2001), எம் ஜி ஆர் விருது (1994), சிறந்த தமிழ் திரை நட்சத்திரத்திற்கான பிலிம்பேர் விருது (2009) ஆகியவற்றை வழங்கி உள்ளது. மத்திய அரசும், 'சிறந்த குடிமகனுக்கான' விருதை வழங்கி கவுரவித்துள்ளது.இவ்வளவு சிறப்புக்கு உரியவர் இன்று நம்மோடு இல்லை ஆழ்ந்த இரங்கல்.




# உத்தரவு போட்ட மோடி; உடனே அஞ்சலி செலுத்த வந்த நிர்மலா சீதாராமன்

**சென்னை தீவுத்திடலில் வைக்கப் பட்டுள்ள விஜயகாந்தின் உடலுக்கு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர், விஜயகாந்தின் மனைவி மற்றும் மகன்களுக்கு ஆறுதல் கூறினார்.**

நடிகரும் தே.மு.தி.க தலைவருமான விஜயகாந்த், உடல்நலக்குறைவால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக்கிழமை காலமானார். தற்போது விஜயகாந்தின் உடல், பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக சென்னை தீவுத்திடலில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சென்னை தீவுத்திடலில் வைக்கப்பட்டுள்ள விஜயகாந்தின் உடலுக்கு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதா ராமன் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர், விஜயகாந்தின் மனைவி மற்றும் மகன்களுக்கு ஆறுதல் கூறினார். அவருடன் தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை, மூத்த தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட பலரும் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் செய்தியாளர்களை சந்தித்துப் பேசுகையில், விஜயகாந்த் மறைந்த செய்தியை கேட்டவுடன் உடனடியாக சமூக வலைதளங்களில் செய்தி போடுவதை தாண்டி மத்திய அரசின் சார்பில் துக்கத்தில் பங்கெடுக்க வேண்டும் என்று கூறி என்னை பிரதமர் மோடி அனுப்பி வைத்தார்.

மனதுக்கு வருத்தமளிக்கும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பிரதமரின் சார்பாக மலர்வளையத்தை சமர்ப்பித்தேன். விஜயகாந்த் இளகிய மனம் படைத்தவர் மட்டுமல்ல மனிதநேயம் மிக்க அரசியல் தலைவர். கேப்டன் தனது வீட்டிற்கு வந்தவர்கள் யாரையும் சாப்பிடாமல் திருப்பி அனுப்பியது கிடையாது. மற்றவர்களின் கஷ்டத்தை பார்க்க முடியாத மனம். அதனால்தான் அவருக்கு கிடைத்த அனைத்து வசதிகளும் மற்றவருக்கும் கிடைக்க வேண்டும் என்று முயற்சி செய்தார். ஒரு நேர்காணலில் கேப்டன், 'நான் என்ன சாப்பிடுகிறேனோ அதைத்தான் என்னுடன் வேலை செய்யும் மற்றவர்களும் சாப்பிட வேண்டும்' என்று கூறுவார். அதனால்தான் தற்போது புது பழக்கமே உருவாகி இருக்கிறது. அப்படி மனித நேயமிக்க மனிதர்.

அந்த மாதிரியான ஒரு குணம் கொண்ட கேப்டன் விஜயகாந்த் இன்று நம்மிடையே இல்லை. அந்த துக்கத்தை எடுத்துச் சொல்ல வார்த்தை இல்லை. அவரை கடைசியாக பார்க்க விரும்பும் கோடான கோடி தொண்டர்களுக்கும் என்னுடைய துக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அவர் கூறினார்.

# காவிரிபட்டினம் B.பூங்காவனம் கவுண்டர் அவர்களுக்கு அனைத்து கட்சி தலைவர்கள் மலர் அஞ்சலி

















அ.தி.மு.க. துணை பொதுச்செயலாளர்,
வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினர்
**கே.பி.முனுசாமி BA.,BL.,MLA.,**
அவர்களின் அன்புத்தந்தையார்
தெய்வத்திரு. **B.பூங்காவனம் கவுண்டர்** அவர்களுக்கு
அனைத்து அரசியல்
கட்சித் தலைவர்கள் அஞ்சலி!
















**AGNI MALARKAL** TAMIL MONTHLY OWNED & PUBLISHED BY R.PANEERSELVAM, NO.5, MUTHUKRISHNAN STREET, PONDY BAZAR, T.NAGAR, CHENNAI -600 017 AND PRINTED BY R.PANEERSELVAM, MEERA OFFSET PRINTERS, NO.104, V.R.PILLAI STREET, TRIPLICANE, CHENNAI-600005 EDITOR: **R. PANNEERSELVAM.**


A GREEN REVOLUTION
FOR FUTURE BUILDINGS
METHRAS
CELL O CON
A GREEN REVOLUTION FOR FUTURE BUILDINGS
அனைவருக்கும் புத்தாண்டு
பொங்கல் நல்வாழ்த்துகள்
CELL O CON
GYPSUM
LIME PLASTER
DRY MIX
MORTAR BRICK
DRY MIX
MORTAR AAC
DRY MIX
PLASTER
Methra are the Leaders in Innovation Construction Technology
CELL O CON Autoclaved Aerated Concrete Blocks and our new range of products are made with internationally proven state of the art technology.
Our Product Range
AAC BLOCKS
REINFORCED AAC PANELS
AERATED LIGHT WEIGHT SOLID WALL SYSTEM
FLY ASH BRICKS
PAVER BLOCKS
DESIGNER PAVER TILES
COVER BLOCKS
HEAT PROOF TILES
DRY MIX MORTAR AND PLASTER
GYPSUM LIME PLASTER
TILE ADHESIVE
WATER PROOFING MEMBRANE
PRE CAST FENCING
HYDROPHOBIC WALL PUTTY
HIGH DENSITY CONCRETE BLOCKS
CONSTRUCTION CHEMICALS
THERMAL PROOF TILES
Managing Director
Dr. P. Venkatesan
M.E (Structures), MBA, Ph.D
METHRA INDUSTRIES INDIA PVT. LTD.
791,Poonamallee High Road, Arumbakkam, Chennai - 600 106
+91 44 2363 8652, +91 94444 44002, +91 94450 11001, +91 +91 94450 11004, +91 94450 11005
methra.sale@gmail.com - methraindustries@rediffmail.com - marketing@methras.in
methrascellocon
methrascellocon
CHENNAI - COIMBATORE - BANGALORE
www.methrascellocon.com

RNI.No.TNTAM/2013/53616, Postal Regn No.TN/CH (C)/597/2022-2024 - WPP No. TN/PMG(CCR)
WPP-669/2022-2024 AGNI MALARKAL TAMIL MONTHLY, Date of Publishing 1st week of Every Month.
POSTED AT EGMORE RMS PATRIKA CHANNEL POSTED ON 3-7 OF EVERY MONTH




#1051, Poonamalle High Road, Arumbakkam, Chennai - 600106.
www.chennaigastroenterologist.in / www.proctocare.net primeherniacare@gmail.com